விலை: 60.00
பக்கங்கள் : 20

website : www.valampurii.lk
viber : 076 636 3378
E-mail: valampurii@yahoo.com

Registered as a Newspaper in Srilanka




# வலம்புரி
## சங்குநாதம்

சங்கு 24
ஒலி 069 வள்ளுவர் ஆண்டு 2054 மாசி 14 ஞாயிற்றுக்கிழமை (26.02.2023) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

## ஐ.நா மனித உரிமை பேரவையின் கூட்டத்தொடர் நாளை ஆரம்பம்
### இலங்கை தொடர்பில் மார்ச் 8, 9 கலந்துரையாடல்

(ஜெனிவா)

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 52 ஆவது கூட்டத்தொடர் நாளை ஜெனிவாவில் ஆரம்பமாக வுள்ளது.

அத்துடன், ஐ.நா மனித உரிமைகள் குழுக் கூட்டமும் அன்றைய தினம் ஆரம்பமாக வுள்ளது.

மார்ச் 24ஆம் திகதி வரை நடைபெறவுள்ள ஐக்கிய நாடு கள் மனித உரிமைகள் குழு கூட்டத்தின்போது இலங்கை விவகாரங்கள் தொடர்பிலும் கலந்துரையாடப்படவுள்ளது.

மார்ச் மாதம் 8 ஆம் திகதியும் 9ஆம் 19

## போதைப்பொருள் வாங்கவே கொள்ளையில் ஈடுபட்டோம்
### கட்டப்பிராய் கொள்ளைச் சம்பவத்துடன் தொடர்புடைய இருவர் வாக்குமூலம்

(யாழ்ப்பாணம்)

போதைப்பொருள் வாங்கவே கொள்ளை யில் ஈடுபட்டோம் என கட்டப்பிராய் கொள் ளைச் சம்பவத்துடன் தொடர்புடைய இரு



19

## நிலாவரையில் திடீரென முளைத்த புத்தர் சிலை
### கடும் எதிர்ப்பையடுத்து அகற்றப்பட்டது



06

## நாட்டின் பல்வேறு பகுதிகளில்
# அரசுக்கு எதிராக ஆர்ப்பாட்டங்கள்



(கொழும்பு)

உள்ளூராட்சி மன்றத் தேர்தலை நடத்துமாறு கோரியும் அத்தியா வசியப் பொருட்களின் விலை அதிகரிப்புக்கு எதிர்ப்புத் தெரிவித் தும் நாட்டின் பல்வேறு பகுதிகளில் அரசுக்கு எதிராக நேற்று ஆர்ப்பாட் டங்கள் முன்னெடுக்கப்பட்டன.

(19ஆம் பக்கம் பார்க்க)

### ஊர்காவற்றுறையில்
## குளத்தில் விழுந்த ஒருவர் உயிரிழப்பு

(யாழ்ப்பாணம்)

ஊர்காவற்றுறை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட சிவன் கோவிலுக்கு அருகாமையில் உள்ள குளம் ஒன்றில் இருந்து ஆணொருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது. 19

## 6 இலட்சம் குடும்பங்களின் மின்சாரம் துண்டிக்கப்படலாம்

(கொழும்பு)

அதிகரித்துள்ள மின் கட்ட ணத்தை செலுத்த முடியாத 6 இலட்சத்துக்கும் அதிகமான மின் பாவனையாளர்களின் மின்சாரம் துண்டிக்கப்படும் அப்பாயம் ஏற்பட்டுள் ளதாக மின்சார 19

### ஊர்காவற்றுறை பொலிஸ் பிரிவில்
## தீயில் எரிந்த நிலையில் இரு பெண்கள் சடலங்களாக மீட்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் ஊர்காவற் றுறை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதியில் உள்ள வீடொன்றில் இருந்து தீயில் கருகிய நிலையில் இரண்டு பெண்கள் சடலங்களாக மீட் கப்பட்டுள்ளனர்.

மனுவேற்பிள்ளை அச லின் பௌலினா, யேசுதாசன் விக்ரோரியா ஆகிய வயது முதிர்ந்த இரண்டு பெண் களின் சடலங்களே இவ்வாறு மீட்கப்பட்டுள்ளன.

உயிரிழப்பு தொடர்பாக விசாரணை நடத்தும் பொலி ஸார் கொலையா? தற்கொலையா? தீ 19

## யாழிலும் நிலநடுக்கம் ஏற்பட வாய்ப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்திலும் நில நடுக்கம் ஏற்பட வாய்ப்புள்ளது என புவியியல் துறை சிரேஷ்ட பேராசிரியர் அதுல சோன ரத்ன தெரிவித்துள்ளார்.

இந் தியாவில் உள்ள இமயமலை 19

## கிளிநொச்சியில் விபத்து; குடும்பஸ்தர் உயிரிழப்பு

(கிளிநொச்சி)

கிளிநொச்சியில் பார ஊர்தி யுடன் துவிச்சக்கரவண்டி மோதி விபத்துக்குள்ளான தில் குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

கிளிநொச்சி பரந்தன் முல் லைத்தீவு ஏ35 வீதியின் கண் டாவளைப் பகுதியில் குறித்த விபத்து நேற்று பிற்பகல் இடம்பெற்றுள்ளது

இதில் வட்டக்கச்சியைச் சேர்ந்த 57 வயதுடைய கதிர வேலு யாதவராசா என்ற ஆறு பிள்ளைகளின் தந்தையே உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்தவரின் சடலம் கிளிநொச்சி 19

## ஜனாதிபதி - தொழிற்சங்க கூட்டமைப்புக்கு இடையிலான பேச்சுவார்த்தை தோல்வி

(கொழும்பு)

ஜனாதிபதி மற்றும் தொழில் வல்லுநர்களின் தொழிற்சங்க கூட்டமைப்பிற்கு இடை யிலான பேச்சுவார்த்தை தோல்வியடைந்துள்ளது.

இதனால் தமது தொழிற் சங்க நடவடிக்கை தொடர்ந் தும் முன்னெடுக்கப்படும் என அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் மத்திய மற்றும் ஊடகக்குழு உறுப்பினர் டாக்டர் வாசன் ரட்ணசிங்கம் கூறினார்.

ஒரு இலட்சம் ரூபாயுக் கும் அதிக சம்பளம் பெறு வோரிடம் ஜனவரி மாதம் முதல் 36% வரை வரி அற விடும் கொள்கைக்கு எதிராக தொழில் வல்லுநர்கள் கடும் எதிர்ப்பு தெரிவித்து வருகின்ற நிலையிலேயே, நேற்று அது தொடர்பிலான கலந்துரை யாடல் இடம்பெற்றமை குறிப் பிடத்தக்கது.

(ப-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

## சுற்றுலா விசா சம்பந்தமான ஆலோசனைகள்

கனடா, அவுஸ்திரேலியா, ஐரோப்பிய நாடுகளுக்கு சுற்றுலா விசாவும் மற்றும் சகல நாடுகளுக்குமான **Student Visa** வும் தேவைப்படுபவர்கள் உடனடியாக தொடர்பு கொள்ளவும்.

**Hybrid International Hub (pvt) LTD** (C-6045)

**076 250 0098 / 021 222 1265**

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603,
021 567 1532

## காணி விற்பனைக்கு

வவுனியா வைத்தியசாலை சுற்றுவட்ட வீதியில் ஒன்று மற்றும் இரண்டு பரப்புக் காணிகள் விற்பனைக்கு உள்ளது.
விலை பேசித் தீர்மானிக்கப்படும்.

தொடர்புகளுக்கு (14727)

**077 656 3582**

## Apex Travels

எம்மிடம் சகல நாடுகளுக்குமான விமான பயணச் சீட்டுக்களை (Flight Tickets) குறைந்த விலையில் பெற்றுக் கொள்ளலாம்.

### யாழ்ப்பாணம் - சென்னை

மற்றும் கொழும்பிலிருந்தான முன்பதிவுகளுக்கு எம்மை நாடுங்கள்

**076 333 3644, 021 222 8008, 077 350 4700** (14731)

**இல.105/1 மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.**

## காணி விற்பனைக்கு

ரவி கராஜ் அருகாமை சாந்தசோலை வீதி, பூந்தோட்டம் எனும் முகவரியில் இரண்டு பரப்புக் காணி விற்பனைக்கு உள்ளது.
விலை பேசித் தீர்மானிக்கப்படும்.

தொடர்புகளுக்கு (14728)

**077 656 3582**

## கடை வாடகைக்கு தேவை

அலுவலகம் அமைக்கக்கூடிய மற்றும் 04 பணியாளர்கள் வேலை செய்யக் கூடிய இடவசதி கொண்ட கடை நல்லூர் Temple வீதியிலும் (இந்தியன் வீசா நிலையத்திற்கு அருகில்) மற்றும் பலாலி வீதியில் உரும்பிராய் சந்திக்கு அருகில் ஒரு கடையும் தேவை. (14731)

தொடர்புகளுக்கு

**077 773 0900**

## உடனடி வேலை வாய்ப்பு

விநியோக நிறுவனத்தில் SALES REP ஆக பணியாற்ற 2 நபர்கள் தேவை.
மாத சம்பளம் + கமிசன் அடங்கலாக 80,000/= (14724)

தொடர்புகளுக்கு

**077 473 7737**

## A/L ECONOMICS பொருளியல்

2024 பிரிவு மாணவர்களுக்கான தனிப்பட்ட & குழு பொருளியல் வகுப்புக்கள் வீடுகளுக்கு வந்து கற்பிக்கப்படும். (14725)

தொடர்புகளுக்கு

**076 991 3255**

## காணியும் வீடும் விற்பனைக்கு

1 3/4 பரப்பு காணி வீட்டுடன் விற்பனைக்கு உண்டு. No.25. வைரவர் கோயில் வீதி அரியாலை (தபால் கட்டைச் சந்தி) A9 வீதியிலிருந்து 500m தூரத்தில் அமைந்துள்ளது. (14729)

தொடர்புகளுக்கு

**077 952 2546**

A/L பெறுபேறுகளை எதிர்பார்த்து காத்திருக்கும் மாணவியரே!
வெளிநாடு செல்லவிருக்கும் மங்கையரே!! சொந்தமாக தொழில் செய்ய விரும்பும் நங்கையரே!!!

**உங்களுக்கான 3 மாத பயன்மிகு பயிற்சிகள் ஆரம்பமாகின்றன!**

*கேக் ஐசிங், உணவு தயாரித்தல், Hair Dressing & Styling*
*அழகுக் கலை*, **Facials**, மணப்பெண் அலங்காரம்,
பலவிதமான சேலை அணியும் முறைகள். ஆரி எம்ரோய்டரி

**சனி, ஞாயிறு புதிய பிரிவுகள் ஆரம்பம் : 04.03.2023 சனி காலை 10.30**
**கிழமை நாள் புதிய பிரிவுகள் ஆரம்பம் : 08.03.2023 புதன் காலை 10.30**

மேலும் விபரங்களை நேரில் அறிந்து கொள்ளலாம். (C-6059)

### யாழ் கலாலயா பயிற்சியகம்

விக்ரோறியா வீதி, யாழ்ப்பாணம். (யாழ். போதனா வைத்தியசாலை பின் புற வீதி)

## காணி தேவை

நல்லூர், கச்சேரி நல்லூர் வீதி, கல்வியங்காடு, திருநெல்வேலி மற்றும் இராச பாதை வீதி ஆகிய இடங்களில் 4 பரப்பு காணி உடனடியாக தேவை. உள்ளவர்கள் தொடர்பு கொள்ளவும். (14733)

**076 801 5646**

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்



தோற்றம் 24 . 05 . 1951

மறைவு 29 . 01 . 2023

கடந்த 29.01.2023 ஞாயிற்றுக்கிழமை அன்று சிவபதம் அடைந்த எமது குடும்பத்தலைவி

### அமரர் திருமதி சறோஜினிதேவி புஷ்பநாதன் (தேவி)

(பங்களார் துர்க்கா பொத்தகச் சோலை சுன்னாகம்)

அவர்களின் அந்தியேட்டிக்கிரியைகள் இன்று (26.02.2023) ஞாயிற்றுக்கிழமை காலை கீரிமலை புனித தீர்த்தக்கரையில் நடைபெற்று நாளை மறுதினம் செவ்வாய்க் கிழமை (28.02.2023) அன்று வீட்டுக்கிருத்தியம் அன்னாரது இல்லத்தில் நடைபெறும் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்பசகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

**இந்த அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக தயவு செய்து ஏற்றுக்கொள்ளவும்.**

எமது குடும்ப விளக்கு நோயுற்று இருந்த போது உயரிய வைத்திய ஆலோசனைகளை வழங்கியும் மிக சிறப்பான வைத்திய சேவைகளை வழங்கியமைக்காகவும் யாழ் போதனா வைத்தியசாலை வைத்திய குழுவினர்களுக்கும், தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலை வைத்திய குழுவினர்களுக்கும் எமது இறவா நன்றிகளைத் தெரிவிக்கக் கடமைப்பட்டுள்ளோம். மற்றும் அன்னாரின் மரணச் செய்தி அறிந்து நேரிலும், ஊடகங்கள் மூலமும் துக்கங்களை பகிர்ந்தோருக்கும், அஞ்சலி பிரசுரங்களையும் பதாகைகளை வெளியிட்டு அனுதாபம் தெரிவித்த உற்றார், உறவினர், நண்பர்களுக்கும் எமக்கு உணவூட்டிய பெருமைக்குரியவர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

தகவல்: குடும்பத்தினர்

"தேவி வாசா" பஸ்நிலையம் முன்பாக, சுன்னாகம் **076 749 0219**

## S.J. FINANCE

S.J. Group & Company
*get your success with us*

**எம்மால் உங்களுக்கு கிடைக்கும் நன்மைகள்**

- வியாபார முறையிலான குறைந்த வட்டி வீதம்
- காசோலை மூலம் வாராந்தம் கடன் செலுத்தும் முறை
- குறைந்த கடன் தொகை 50,000/- முதல் 5,000,000/- வரை
- குறைந்த ஆவணங்களுடன் கடன் வசதி

**5%**

**வழங்க வேண்டிய ஆவணங்கள்**

- வியாபார பதிவு பத்திரம் (BR COPY)
- வதிவிடத்தை உறுதிப்படுத்திய GS கடிதம்
- நடைமுறை கணக்கு (Current Account) வங்கி அறிக்கை
- தேசிய அடையாள அட்டை நகல் (NIC Copy)

உதாரணமாக:-

| கடன் தொகை | 02மாதம் | 03மாதம் | 04மாதம் |
|---|---|---|---|
| Rs.50,000 | 6,875 X 8 | 4,792 X 12 | 3,750 X 16 |
| Rs.100,000 | 13,750 X 8 | 9,585 X 12 | 7,500 X 16 |
| Rs.200,000 | 27,500 X 8 | 19,167 X 12 | 15,000 X 16 |
| Rs.300,000 | 41,250 X 8 | 28,750 X 12 | 22,500 X 16 |
| Rs.400,000 | 55,000 X 8 | 38,335 X 12 | 30,000 X 16 |
| Rs.500,000 | 68,750 X 8 | 47,917 X 12 | 37,500 X 16 |

(14724)

TAMIL **0774 737 737** | SINHALA **0774 069 185**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொறியியலாளர் பற்றாக்குறை காரணமாக மீண்டும் நீண்டநேர மின்தடை ஏற்படும் அபாயம்

(கொழும்பு)

**இலங்கை மின்சார சபையில் பொறியியலாளர்கள் பற்றாக்குறை நிலவுவதால் எதிர்வரும் காலங்களில் தொடர்ச்சியாக மின்சார விநியோகத்தை வழங்க முடியாது என மின்சார சபையின் பொறியியலாளர் சங்கம் எச்சரித்துள்ளது.**

மேலும், நுரைச்சோலை அனல்மின் நிலையத்தை இயக்குவதில் சிக்கல் ஏற்பட்டுள்ளதாகவும் சங்கத்தின் இணைச் செயலாளர் இசுரு கஸ்தூரிரத்ன குறிப்பிட்டார்.

கடந்த ஒரு வருடத்தில் மின்சார சபையின் 72 பொறியியலாளர்கள் நாட்டை விட்டு வெளியேறியுள்ளதாகவும் அவர்களில் 22 பேர் நுரைச்சோலை மின் உற்பத்தி நிலையத்தில் பணிபுரிவதாகவும் அவர் குறிப்பிடுகிறார்.

நுரைச்சோலை மின் உற்பத்தி நிலையத்தை வழமையாக நடத்துவதற்கு 123 பொறியியலாளர்கள் பணியாற்ற வேண்டும்.

ஆனால் இன்று 100 பேரே பணிபுரிவதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

மேலும், இந்த பொறியியலாளர்கள் பற்றாக்குறையால், வருங்காலத்தில் ஆலையை நிறுத்த வேண்டிய நிலை கூட ஏற்படலாம் என்றும் அப்படி நடந்தால், மின் நெருக்கடி கடுமையாகும் என்றும் அவர் தெரிவித்தார். (நி)

# மக்களின் வாக்குரிமைக்கு எதிரான நகர்வுகளை தோற்கடிக்க அனைவரும் ஒன்றிணைவோம்

## அநுரகுமார அழைப்பு

(கொழும்பு)

தேர்தலை பிரகடனப்படுத்துவது தொடர்பில் கருத்து தெரிவிக்க ஜனாதிபதிக்கு உரிமை இல்லை என்றும் அவை அனைத்தும் நீதிமன்றத்தால் தீர்த்துக் கொள்ளப்பட வேண்டியவை என்றும் ஜே.வி.பி தலைவர் அனுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

தேர்தல்கள் ஆணைக்குழு சட்டரீதியாக செயற்படாவிட்டால் ஜனாதிபதி நீதிமன்றத்தை நாடலாம் எனவும் தேர்தல் குறித்து ஜனாதிபதி பாராளுமன்றத்தில் முன்வைத்த விடயங்கள் அனைத்தும் பொய்யானவை என்றும் குற்றம் சாட்டியுள்ளார்.



தேர்தலுக்கான திகதியை அறிவித்து, வேட்புமனுக்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டு, தபால் மூல வாக்களிப்பிற்கான திகதியும் அறிவிக்கப்பட்ட நிலையில், உத்தியோகபூர்வ அறிவிப்பு விடுக்கவில்லை என ஜனாதிபதி கூறுவது அப்பட்டமான பொய் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

ஆகவே ஜனநாயகம் மற்றும் மக்களின் வாக்குரிமைக்கு எதிரான ஜனாதிபதியின் நகர்வுகளை தோற்கடிக்க அனைத்து அரசியல் கட்சிகள் மற்றும் அமைப்புகளும் ஒன்றிணைய வேண்டும் என்றும் அநுர குமார திஸாநாயக்க கேட்டுக் கொண்டுள்ளார். (நி)

## விலகுகிறார் மயந்த

(கொழும்பு)

ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் மயந்த திஸாநாயக்க, பாராளுமன்ற நிதிக் குழுவின் தலைவர் பதவியில் இருந்து விலகத் தீர்மானித்துள்ளார்.

தனது தீர்மானம் தொடர்பில் மயந்த திஸாநாயக்க, கட்சியின் பொதுச் செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டாரவுக்கும் அறிவித்துள்ளார்.

சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தனவுக்கு எழுத்து மூலம் அறிவித்ததன் பின்னர், நிதிக் குழுவின் தலைவர் பதவியிலிருந்து மயந்த திஸாநாயக்க உத்தியோகபூர்வமாக விலகவுள்ளார். (நி)

# ஏலத்திற்கு விடப்படும் திறைசேரி உண்டியல்

(கொழும்பு)

85,000 மில்லியன் ரூபாய் பெறுமதியான மற்றுமொரு திறைசேரி உண்டியல், ஏலம் எதிர்வரும் முதலாம் திகதி நடைபெறவுள்ளதாக இலங்கை மத்திய வங்கி தெரிவித்துள்ளது.

அவை 91 நாட்களில் 45,000 மில்லியனுக்கும் 182 நாட்களில் 20,000 மில்லியனுக்கும் 364 நாட்களில் 20,000 மில்லியனுக்கும் ஏலம் விடப்படும் என இலங்கை மத்திய வங்கி தெரிவித்துள்ளது. (நி)

# தேர்தலை நடத்துமாறு கோரி தலவாக்கலையில் போராட்டம்

(கொழும்பு)

உள்ளூராட்சி சபைத் தேர்தலை உடன் நடத்துமாறு அரசாங்கத்தை வலியுறுத்தி தலவாக்கலை நகரில் நேற்று சனிக்கிழமை போராட்டமொன்று முன்னெடுக்கப்பட்டது.

ஐக்கிய மக்கள் சக்தியின் நுவரெலியா மாவட்ட அமைப்பாளரால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த இப்போராட்டத்தில் கட்சி செயற்பாட்டாளர்களும் மக்களும் கலந்து கொண்டனர்.



"தேர்தலை ஒத்திவைத்து மக்கள் சாபத்துக்கு உள்ளாகாதே, தேர்தலை உடன் நடத்து, மனித உரிமைகளை மீறி சர்வதிகார ஆட்சி செய்யாதே, பொருட்களின் விலையை குறை" என்பன உட்பட பல கோஷங்கள் எழுப்பப்பட்டன. (நி)

## மகிந்தவை பிரதமராக்க திட்டம்

### வெளிப்படுத்திய ஆளும்கட்சி

(கொழும்பு)

தற்போதைய பிரதமர் தினேஷ் குணவர்தனவை நீக்கி புதிய பிரதமராக மீண்டும் மகிந்த ராஜபக்ஷவை கொண்டுவருவதற்கான முயற்சிகள் எடுக்கப்படுவதாக பாராளுமன்ற உறுப்பினர் சன்ன ஜயசுமன தெரிவித்துள்ளார்.

இதற்காக ஆளும்கட்சியிலுள்ள பலர் தமது ஆதரவுகளை கோரியதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

பிரதமர் பதவியை மாற்றுவதால் மாத்திரம் இந்த நாட்டின் பிரச்சினை தீரப்போவதில்லை, முழு அரசாங்கமும் வீட்டிற்கு செல்ல வேண்டும். அப்போது தான் பிரச்சினைக்கு தீர்வு வரும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (நி)

# உரங்களை இறக்குமதி செய்ய நடவடிக்கை-தேசிய உரசெயலகம்

(கொழும்பு)

எதிர்வரும் பருவத்திற்கான உரங்களை இறக்குமதி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக தேசிய உர செயலகம் தெரிவித்துள்ளது.

உலக விவசாய நிறுவனத்துடன் தொடர்பு கொண்டு உர இறக்குமதிக்கு தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக அதன் பணிப்பாளர் சந்தன முத்துஹேவகே குறிப்பிட்டுள்ளார்.

கடந்த பருவத்தில் இறக்குமதி செய்யப்பட்ட உரம் இன்னும் இருப்பில் உள்ளதாக சந்தன முத்துஹேவகே தெரிவித்துள்ளார். (நி)

# உதிரிப்பாகங்களுக்கான தட்டுப்பாடுகளால் ரயில் சேவைகளில் தாமதம்

(கொழும்பு)

புகையிரத திணைக்களத்திற்கு தேவையான உதிரிப்பாகங்கள் இல்லாத காரணத்தினால் ரயில் சேவைகளில் தாமதம் தொடர்வதாக ரயில்வே பொது முகாமையாளர் டபிள்யூ.ஏ.டி. எஸ்.குணசிங்க தெரிவித்துள்ளார்.

இது குறித்து ரயில்வே பொது மேலாளர் தெரிவிக்கையில், ரயில் தண்டவாளங்கள் பராமரிக்கப்படாததால், ரயில்கள் அடிக்கடி தடம்புரண்டு வருகின்றன. இதன் காரணமாக ரயில் சேவையில் தாமதங்கள் ஏற்படுவதாகவும் ரயில் மின் பெட்டிகளில் ஏற்படும் தொழில்நுட்பக் கோளாறுகளாலும் ரயில் பயணங்களில் தாமதம் ஏற்படுவதாகவும் அவர் தெரிவித்தார். (நி)

# 20 இலட்சம் முட்டைகளுடன் இலங்கை வரும் கப்பல்

(கொழும்பு)

இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்யப்படும் 20 இலட்சம் முட்டைகளை தாங்கிய கப்பல் நாட்டை வந்தடையவுள்ளது.

உள்ளூர் சந்தையில் முட்டையின் விலை அதிகரித்துள்ளமைக்கு தீர்வுகாணும் பொருட்டு இந்தியாவில் இருந்து முட்டையை இறக்குமதி செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொன் அணிகளின் போர்; சென். பற்றிக்ஸ் சம்பியன்




(யாழ்ப்பாணம்)

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற பொன் அணிகளின் சமரில் சென்.பற்றிக்ஸ் கல்லூரி சம்பியனாகியது.

பொன் அணிகளின் போர் என வர்ணிக்கப்படும் யாழ்ப்பாணம் சென். பற்றிக்ஸ் கல்லூரிக்கும் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி அணிகளுக்கு மிடையிலான 106 ஆவது துடுப்பாட்ட போட்டி நேற்று முன்தினம் காலை ஆரம்பானது.

தொடர்ச்சியாக இரண்டு நாட்கள் இரண்டு இனிங்ஸ்களாக நடைபெற்ற இப்போட்டியில் நாணய சுழற்சியில் வெற்றி பெற்ற வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி முதலில் களத்தடுப்பை தெரிவு செய்தது.

இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய சென்.பற்றிக்ஸ் கல்லூரி 74 ஓவர்களுக்கு 9 விக்கெட்டுகளை இழந்து 272 ஓட்டங்களை பெற்ற நிலையில் தனது முதல் இனிங்ஸை இடைநிறுத்தியது.

துடுப்பாட்டத்தில் சென். பற்றிக்ஸ் கல்லூரி சார்பில் அபிலாஸ் 54 ஓட்டங்களையும், சமிதன் 50 ஓட்டங்களையும் அதிகபட்சமாக பெற்றுக்கொடுத்தனர். பந்து வீச்சில் யாழ்ப்பாண கல்லூரி சார்பில் பிருந்தன், நர்தனன், ரோய் ஜெனிசன் ஆகியோர் தலா இரண்டு விக்கெட்டுகளை கைப்பெற்றனர்.

பதிலுக்கு முதலாம் இனிங்சில் துடுப்பெடுத்தாடிய வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி 42 ஓவர்களில் 70 ஓட்டங்களை மாத்திரம் பெற்று அனைத்து விக்கெட்டுகளையும் இழந்தது. துடுப்பாட்டத்தில் யாழ்ப்பாணக் கல்லூரி சார்பில் அதிகபட்சமாக மதுசன் 24 ஓட்டங்களை பெற்றுக்கொடுத்தார்.

பந்துவீச்சில் யாழ்.சென்.பற்றிக்ஸ் கல்லூரி சார்பில் சாருசன், சதுர்ஜன் ஆகியோர் தலா 4 விக்கெட்டுக்களை கைப்பற்றினர்.




202 ஓட்டங்கள் முன்னிலையில் இருந்த யாழ். சென். பற்றிக்ஸ் கல்லூரி துடுப்பெடுத்தாடும் சந்தர்ப்பத்தை பலோன் ஆட்ட முறையில் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரிக்கு வழங்கியது.

அதனடிப்படையில் இரண்டாம் இனிங்ஸ்க்காக துடுப்பெடுத்தாடிய வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி 64.4 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 179 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது.

துடுப்பாட்டத்தில் யாழ்ப்பாண கல்லூரி சார்பில் அதிகபட்சமாக மதுசன் 54 ஓட்டங்களையும், நர்தனன் 22 ஓட்டங்களையும் பெற்றுக்கொடுத்தனர். பந்து வீச்சில் யாழ்.சென்.பற்றிக்ஸ் கல்லூரி சார்பில் சாருசன், அபிலாஸ் ஆகியோர் தலா 3 விக்கெட்டுக்களை கைப்பற்றினர்.

இதனடிப்படையில் 106 ஆவது பொன் அணிகளின் துடுப்பாட்டப் போட்டியை யாழ்ப்பாணம் சென்.பற்றிக்ஸ் கல்லூரி இனிங்ஸ் மற்றும் 23 ஓட்டங்களால் வெற்றி பெற்று கிண்ணத்தை தனதாக்கிக் கொண்டது.

போட்டியின் சிறந்த துடுப்பாட்ட வீரராக யாழ்ப்பாண கல்லூரி வீரர் மதுசனும் சிறந்த பந்துவீச்சாளராக சென். பற்றிக்ஸ் கல்லூரி வீரர் சாருசனும் போட்டியின் ஆட்ட நாயகனாக சென்பற்றிக்ஸ் கல்லூரி வீரர் அபிலாஸ் தெரிவு செய்யப்பட்டனர். (ம-7,33,104)


## மரண அறிவித்தல்

### சிவபாக்கியம் பாலதரன்

(மின் இணைப்பாளர்)



அன்னை மடியில் 25.08.1979 — ஆண்டவன் அடியில் 25.02.2023

அல்வாய் மாவடிச்சோலையைப் பிறப்பிடமாகவும் அல்வாய் வடமேற்கு முன்னங்கட்டையை வசிப்பிடமாகவும் கொண்ட சிவபாக்கியம் பாலதரன் (மின் இணைப்பாளர்) அவர்கள் நேற்று (25.02.2023) சனிக்கிழமை இறைபதம் அடைந்து விட்டார்.

அன்னார் சிவபாக்கியம் (வேங்கை) - செல்வாம்பிகை தம்பதியினரின் பாசமிகு மகனும் பாலசுந்தரம் - குணரஞ்சிதமலர் தம்பதியினரின் அன்பு மருமகனும் நிரோஜினியின் (ஆசிரியை - யா/புங்குடுதீவு மகா வித்தியாலயம்) பாசமிகு கணவரும் பார்கவி, பாவலன் ஆகியோரின் அன்புத் தந்தையும் ஜீவகன் (வேந்தன்), காலஞ்சென்ற ஜீவா (வில்வம் UK), சிவகுமார் (திக்கம் வடிசாலை), அனுஷா (UK), சிவகரன் (UK) ஆகியோரின் அன்புச் சகோதரனும் சுபரஞ்சனி (ஆசிரியை - வல்வெட்டி இ.த.க.பாடசாலை), றேக்கா (UK), அருந்தவச்செல்வி, அகீஸ்பரன் (UK), றசினா (UK), பாலினி (சுற்றாடல் உத்தியோகத்தர் - மத்திய சுற்றாடல் அதிகார சபை), நிரஞ்சன் (சுவிஸ்), நிசாந்தினி, நிலக்சனா ஆகியோரின் அன்பு மைத்துனரும் காலஞ்சென்ற வீரராசா, ஜெயவீரசிங்கம் (UK), காலஞ்சென்றவர்களான கதிரவேல் தங்கமலர், வல்லிபுரம், யோகாம்பிகை, புவனேந்திரன் - செல்வாம்பிகை, வன்னியசிங்கம் - புஸ்பராணி மற்றும் தியாகராசா - வசந்தாதேவி ஆகியோரின் அன்பு மருமகனும், விஜயராசா, செல்வநாதன் - பாரதாதேவி ஆகியோரின் அன்புப் பெறாமகனும் ராகவன் (ஆசிரியர் - ரெக்னோ வேல்ட் - யாழ்ப்பாணம்), இனியவன் (பயிற்றுவிப்பாளர் - செம்பியன்பற்று அ.த.க.பாடசாலை) ஆகியோரின் ஒன்றுவிட்ட சகோதரனும் அஸ்வின் (UK), அனீஸ் (UK), அபிஸ் (UK), அக்னித், சங்கரானந், ரக்சிதா, நிகேதானந் ஆகியோரின் சிறிய தந்தையும் யகீஸ், அபினாஸ், அபிநிசாந் ஆகி யோரின் பெரிய தந்தையும் தீபிகா (UK), பாலாம்பிகா (UK) ஆகியோரின் அன்பு மாமனும் கர்ணானந்தன் (விரிவுரையாளர் - அட்டாளைச்சேனை கல்வியியற் கல்லூரி), ஜோன்சிகன், றசாத் ஆகியோரின் பாசமிகு சகலனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (26.02.2023) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக அல்வாய் பங்குவேம்படி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

(C-6064) தகவல்: குடும்பத்தினர்

## வீடு வாடகைக்கு தேவை

கச்சேரி - யாழ்ப்பாணத்தில் இருந்து 5 KM இற்குள். நடுத்தர தனிமனித வருமானமுள்ள தாய் தந்தை இரண்டு குழந்தைகள், குறைந்தது 6 வருடங்கள் வசிப்பதற்கு எதிர்பார்ப்பு. வீட்டு உரிமையாளர்கள் அவர்தம் உறவினர்களின் தொல்லை இன்றி இருத்தல் நன்று. வீடு & சுற்றாடல் சிறப்பாக பராமரித்தல் உறுதி செய்யப்படும். (C-6065)

தொடர்பு :- 071 078 0240

## கண்ணீர் அஞ்சலி

எமது சக நண்பன்
திரு மரினோ சஞ்சேய் அவர்களின்
அன்புத் தந்தை

திரு **அந்தோனிப்பிள்ளை மரியதாஸ்**



அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஆழ்ந்த துயரத்துடன்
**யாழ்ப்பாண மருத்துவ பிரதிநிதிகள் சங்கம்.**

(14730)

## கட்டட நிர்மாண சேவை

உங்கள் விருப்பத்திற்கேற்ப வீடுகள், கடைகள் அமைக்கவும் கூரை வேலைகள் செய்து கொள்ளவும் எமது அனுபவம் வாய்ந்த தொழிலாளர்கள் மூலம் பொறியியலாளர்களின் நேரடி மேற்பார்வையில் தரமாகவும், நியாயமான செலவிலும், உரிய காலத்திலும் அமைத்துக்கொள்ள நாடுங்கள் (C-6063)

**Luxmy Construction (pvt) Ltd**


Thumbalai Road, Pointpedro | Neervely South, Neervely | 076 288 4366 077 436 6704

## வீடு விற்பனைக்கு

அரசடி வீதி, இருபாலை கிழக்கு எனும் இடத்தில் இரண்டு பரப்புக் காணியில் அமைந்துள்ள புதிய வீடு உடன் விற்பனைக்கு

077 191 2585

## கறையான்களை கட்டுப்படுத்துதல்



கட்டடங்களில் கறையான்களால் ஏற்படும் பாதிப்புக்களை உத்தரவாதத்துடன் (Warranty) இல்லாதொழிக்க

**N.Rubakanth**

077 151 5897

(14737)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தேர்தலில் போட்டியிடுவதற்காக

# சம்பளமற்ற விடுமுறையில் உள்ளவர்கள்

# தேர்தல் நடைபெறும் வரை சேவையில் ஈடுபட முடியாது

## தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் உத்தரவு

(கொழும்பு)

**உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் போட்டியிடுவதற்காக சம்பளமற்ற விடுமுறையில் உள்ள அரச சேவையாளர்கள் உள்ளூராட்சி மன்றத் தேர்தல் இடம்பெறும் வரையிலும் சேவையில் ஈடுபட முடியாது.**

தேர்தல் நிபந்தனைகளுக்கு உட்பட்ட வகையில் தான் அவர்கள் தேர்தலில் போட்டியிட தீர்மானித்தார்கள்.

தேர்தல் இல்லை என்று குறிப்பிடவில்லை. தேர்தல் பிற்போடப்பட்டுள்ளது என்பதை குறிப்பிட்டுக் கொள்கிறோம் என தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் சமன் ஸ்ரீ ரத்நாயக்க தெரிவித்தார்.

உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் போட்டியிடுவதற்காக சம்பளமில்லாத விடுமுறையில் உள்ள அரச சேவையாளர்கள் தொடர்பில் வினவிய போது மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிட்டதாவது,

அரச சேவையாளர்கள் தேர்தலில் போட்டியிட வேண்டுமாயின் அவர்கள் மூன்று மாத காலம் சம்பளமில்லாத விடுமுறை என்ற அடிப்படையில் சேவையில் இருந்து இடைவிலக வேண்டும்.

அரசியலமைப்பின் பிரகாரம் உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கான அறிவிப்பு வெளியிடப்பட்டது. அதற்கமைய எதிர்வரும் மார்ச் மாதம் 9 ஆம் திகதி உள்ளூராட்சி மன்றத் தேர்தலை நடத்த தீர்மானிக்கப்பட்டது.

தவிர்க்க முடியாத காரணிகளினால் எதிர்வரும் மாதம் உள்ளூராட்சி மன்றத் தேர்தலை நடத்த முடியாத நிலை காணப்படுகிறது.

இவ்வாறான பின்னணியில் தேர்தலில் போட்டியிடுவதற்காக சம்பளமில்லாத விடுமுறையில் உள்ள அரச சேவையாளர்கள் தொடர்பில் தற்போது பல்வேறு விடயங்கள் குறிப்பிடப்படுகின்றன.

தேர்தலில் போட்டியிடுவதற்காக சம்பளமற்ற விடுமுறையில் உள்ள அரச சேவையாளர்கள் உள்ளூராட்சி மன்றத் தேர்தல் இடம்பெறும் வரை அரச சேவையில் ஈடுபட முடியாது.

தேர்தல் நிபந்தனைகளுக்கு உட்பட்ட வகையில் தான் அவர்கள் தேர்தலில் போட்டியிட தீர்மானித்து, அதற்கான நடவடிக்கைகளை முன்னெடுத்தார்கள்.

உள்ளூராட்சி மன்றத் தேர்தல் இல்லை என்று குறிப்பிடவில்லை. தவிர்க்க முடியாத காரணங்களினால் தேர்தல் பிற்போடப்பட்டுள்ளது.

உள்ளூராட்சி மன்றத் தேர்தல் தொடர்பில் நிச்சயமற்ற தன்மை காணப்படும் நிலையில் சம்பளம் இல்லாத விடுமுறையில் உள்ள அரச சேவையாளர்கள் தொடர்பில் விசேட கவனம் செலுத்துமாறு ஆளும் மற்றும் எதிர்க்கட்சிகளின் உறுப்பினர்கள் பிரதமரிடம் வலியுறுத்தியமை குறிப்பிடத்தக்கது. (நி)


5 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 13.11.1944 மறைவு 22.02.2018



அமரர். துரைராசா சிவராசா

ஆற்றுப்படுத்தி வழிகாட்டினீர்
ஆண்டுகள் ஐந்து ஆனாலும்
ஆறாது உம் பிரிவுத்துயர்
ஆண்டவனடியில் ஆறுதலடைய
ஆத்மார்த்தமாய் பிரார்த்திக்கின்றோம்.

இணுவில் தெற்கு, இணுவில்.

என்றும் உம் நினைவுகளுடன்
மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

(14715)


# உலக சந்தையில்

## தங்கத்தின் விலை குறைந்தது

(வோஷிங்டன்)

உலக சந்தையில் நேற்று ஒரு அவுன்ஸ் தங்கத்தின் விலை இலங்கை ரூபாவின் படி 663,048 ரூபாவாக பதிவாகியுள்ளது.

இலங்கையில் கடந்த சில நாட்களாக தங்கத்தின் விலை மாற்றமடைந்த நிலையில், தங்கத்தின் விலை மாற்றமின்றி நேற்று முன்தின விலைக்கு அமைவாகவே பதிவாகியுள்ளது.

24 கரட் தங்கப் பவுண் ஒன்று 187,150 ரூபாவாகவும் 22 கரட் தங்கப் பவுண் ஒன்று 171,550 ரூபாவாகவும் பதிவாகியுள்ளது. (நி)

# இராசிபலன்

26.02.2023
மாசி 14, ஞாயிற்றுக்கிழமை
சப்தமி பின்னிரவு 6.00 மணிவரை

பரணி முற்பகல் 9.02 மணிவரை
சுபநேரம் 9.29-10.59 மணிவரை
இராகுகாலம் 4.59-06.29 மணிவரை

சந்திராஷ்டமம் -சித்திரை
கார்த்திகை விரதம்

வளவன்

**மேஷம்** திட்டமிடாது செய்த காரியங்களில் கூட முன்னேற்றம் காண்பீர்கள், கொடுத்த வாக்கை காப்பாற்ற வேண்டும் என்ற எண்ணம் உருவாகும், பணத் தேவைகள் எளிதில் பூர்த்தியாகும்.

**ரிஷபம்** உள்ளொன்று வைத்து புறமொன்று பேசுபவர்களை இனங்கண்டு கொள்வீர்கள், தொலைபேசி வழியில் ஆச்சரியம் தரும் தகவல்கள் வந்து சேரலாம், கற்பனை மிகுதியான நாள்.

**மிதுனம்** வழிபாட்டால் திருப்தி காண வேண்டிய நாள், எடுத்த காரியங்களை நிறைவேற்ற ஒரு முறைக்கு பலமுறை அலைய நேரிடலாம், மகிழ்ச்சி தரும் பயணங்கள் இடம்பெறலாம்.

**கடகம்** மகிழ்ச்சி தரும் பயணங்கள் இடம்பெறலாம், மற்றவர்கள் கடுமையாக நினைக்கும் வேலை ஒன்றை நீங்கள் எளிதாக செய்து முடிப்பீர்கள், பொது வாழ்வில் புகழ் கூடும்.

**சிம்மம்** குடும்பத்தில் மகிழ்ச்சி தரும் சம்பவங்கள் இடம்பெறும் வாய்ப்புண்டு, கொள்கைப் பிடிப்போடு செயற்படுவீர்கள், செயற்பாடுகளில் தீவிரம் காட்டுவீர்கள், போசன சுகமுண்டு.

**கன்னி** மறைமுக. எதிர்ப்புக்கள் மாறும், தடைப்பட்ட காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், அதிகம் செலவாகும் என நினைத்த காரியம் நல்லவிதமாக நடைபெறலாம்.

**துலாம்** ஆரோக்கியம் சீராக ஆகாரத்தில் கட்டுப்பாடு தேவை, மறதியால் ஒரு சில பணிகளைச் செய்யாமல் விட்டு விடுவீர்கள், சில பிரச்சினைகளைக் கண்டும் காணாமலும் இருப்பது நல்லது.

**விருச்சிகம்** தெய்வீகச் சிந்தனை மேலோங்கும் நாள், உறவினர் வழியில் ஒத்துழைப்புகள் கிடைக்கும், வருங்கால நலன்கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், போசன சுகமுண்டு.

**தனுசு** கடன் சுமை குறைய வழிவகை செய்வீர்கள், புகழ் மிக்கவர்களின் சந்திப்பு இடம்பெறலாம், வியாபார விரோதம் விலகும், தேக நலனில் முன்னேற்றம் காண வேண்டிய நாள்.

**மகரம்** பிள்ளைகளின் நலனில் அக்கறை காட்டுவீர்கள், வீட்டு உபயோகப் பொருட்களை வாங்கும் எண்ணம் உருவாகும், திருமண முயற்சிகள் முன்னேற்றம் தரும்.


**கும்பம்** வளர்ச்சிப் பாதைக்கு நண்பர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும், பெற்றோர் மீது பிரியம் கூடும், நண்பர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும் வாய்ப்புண்டு, சுப தகவல்கள் வந்து சேரலாம்.

**மீனம்** பெரிய மனிதர்களின் சந்திப்பால் உள்ளம் மகிழ்வீர்கள், முத்தான வாய்ப்புகள் இல்லம் வந்து சேரலாம், எடுத்த காரியங்கள் எளிதில் கைகூடும், போசன சுகமுண்டு.

வெற்றியில் கற்பதை விட வீழ்ச்சியில் கற்பது அதிகம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிலாவரையில் திடீரென முளைத்த புத்தர் எதிர்ப்பை அடுத்து அகற்றப்பட்டது சிலை





(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் -அச்சுவேலி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட நிலா வரை கிணறு அமைந்துள்ள பகுதியில் அரசமரத்துக்கு கீழே புத்தர் சிலையொன்று இனங் காணப்பட்டிருந்தது.

அந்தப் பகுதியில் நின்ற இராணுவத்தினரே அதனை அமைத்ததாகத் தெரிவிக்கப்படும் நிலையில் ஏற்பட்ட எதிர்ப்பு காரணமாகவும் வலிகாமம் கிழக்கு பிரதேச சபையின் தலையீட்டையும் அடுத்து சிலை இராணுவத்தினரால் எடுத்து செல்லப்பட்டது. இந்நிலையில் அப்பகுதியில் பொலிஸாரும் இரா ணுவத்தி னரும் பிரசன்னமாகி இருந்தனர்.

நிலாவரை பகுதியில் தொல் லியல் திணைக்களத்தினர் உரிமை கொண்டாடும் நிலை யில் நிலாவரை பகுதியை சுற்றி இராணுவத்தினர் கடமையில் ஈடுபட்டு வரும் நிலையில் குறித்த சிலை வைத்திருந்தது பரபரப்பை எழுப்பியமை குறிப்பிட த்தக்கது. (நி-33)

## அவுஸ். தமிழ் இலக்கிய கலைச்சங்கத்தினால் மூன்று எழுத்தாளர்களிற்கு பரிசளிப்பு

(முறிகண்டி)

அவுஸ்திரேலிய தமிழ் இலக் கிய கலைச்சங்கத்தினால் மூன்று தமிழ் எழுத்தாளர்களி ற்கு பரிசளிப்பு நிகழ்வு முன் னெடுக்கப்பட்டது.



குறித்த நிகழ்வு நேற்று முற்பகல் 10 மணியளவில் அவுஸ்தி ரேலிய தமிழ் இலக்கிய கலைச் சங்கத்தின் செயலாளர் நடேசன் தலைமையில் கிளி நொச்சி பழைய மருத்துவ மனை வளாகத்தில் உள்ள சமூக மண்டபத்தில் இடம்பெற் றது.

இதன்போது ஈழத்து தமிழ் எழுத்தாளராக 16 வருடங்களாக சிறையில் உள்ள அரசியல் கைதியான விவேகானந்தனூர் சதீஸ் மற்றும் அருட்திரு தமிழ் நேசன் , சிவராசா கருணாகரன் ஆகியோருக்கு பரிசும் சான்றி தழும் வழங்கி வைக்கப்பட் டன.

ஈழத்து தமிழ் எழுத்தாளராக 16 வருடங்களாக சிறையில் உள்ள அரசியல் கைதியான விவேகானந்தனூர் சதீஸினு டைய பரிசினை அவரது தாயா ரான செல்லையா பவளவதி பெற்றுக் கொண்டார்.

அவர் கடந்த இரண்டு நாட்களிற்கு முன்னர் விடுதலை பெற்றுள்ள நிலையில் குறித்த நிகழ்வில் கலந்து கொள்ள விருந்த போதிலும், விடுவிப் பதற்கான பணிகள் முன்னெடு க்கப்பட்டு வரும் நிலையில் அவர் கலந்து கொண்டிருக்கவில்லை எனவும் அடுத்த வாரங்களில் அவர் விடுதலையாகுவார் எனவும் அவரது தாயார் தெரி வித்தார்.

குறித்த நிகழ்வில் அவுஸ்தி ரேலிய தமிழ் இலக்கிய கலைச் சங்கத்தினர், எழுத்தாளர்கள் உள்ளிட்டோர் கலந்து கொண்ட னர். (நி-100)

## விளையாட்டுத்துறை சார்ந்த இலவசப் பயிற்சிகள்

(யாழ்ப்பாணம்)

வடமாகாண விளையாட்டுத் திணைக்களத்தினால் 25 வய திற்கு உட்பட்ட ஆண், பெண் இரு பாலாருக்கான விளையாட்டுத் துறை சார்ந்த பயிற்சிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டு ள்ளன.

வலைப்பந்து, துடுப்பாட்டம், உதைபந்து, நீச்சல், தற்காப்புக் கலை, கரப்பந்து,கூடைப்பந்து, மேசைப்பந்து, மெய்வல்லுநர் போன்ற பயிற்சிகள் துறை சார் ந்த பயிற்றுவிப்பாளர்களால் முற்றிலும் இலவசமாக மேற் கொள்ளப்படவுள்ளன.

இப்பயிற்சியில் கலந்து கொள்ள ஆர்வம் உள்ளவர்கள் தங்க ளது பூரணப்படுத்தப்பட்ட விண் ணப்படிவத்தினை வடமாகாண திணைக்களத்தில் நேரடியா கவோ அல்லது Whats App, 076 311 9485, 076 189 9651, 076 050 3863 மூலமா கவோ சமர்ப்பிக்க முடியும் என வடமாகாண விளையாட்டுத் திணைக்கள பணிப்பாளர் பா.முகு ந்தன் அறிவித்துள்ளார். மேல திக விபரங்களுக்கு 021 221 5054, 021 224 5064 எனும் தொலைபேசி இலக்கங் களுடன் தொடர்பு கொள்ளலாம். (நி)



யாழ்ப்பாண மாவட்டச் செயலகத்தின் உற்பத்தித்திறன் பிரிவினால் நடத்தப்படும் சிறந்த உத்தியோகத்தருக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வு அண்மையில் யாழ்ப்பாண மாவட்ட அரசாங்க அதிபர் அம்பலவாணர் சிவபாலசுந்தரன் தலைமையில் மாவட்ட செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.

(படம்:சிவசாந்தன்)

## மக்களை வதைக்கும் அரசாங்கத்தை விரட்டக்கோரி யாழில் ஆர்ப்பாட்டம்





(யாழ்ப்பாணம்)

தேசிய மக்கள் சக்தியி னரால் ஏற்பாடு செய்யப்பட்ட ஆர்ப்பாட்டமொன்று யாழ்ப் பாணம் மத்திய பேருந்து நிலையத்திற்கு முன்பாக நேற்று சனிக்கிழமை முற் பகல் 11 மணியளவில் இடம் பெற்றது.

மின்சாரம், நீர், சமையல் எரிவாயு, உணவுகளின் விலைகளை அதிகரித்து மக்களை வதைக்கும் அர சாங்கத்தை விரட்டியடிக்க வும் தேர்தலை வென்றெடு க்கவுமே குறித்த போராட்டம் இடம்பெற்றது.

குறித்த போராட்டத்தில் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் இராமலிங்கம் சந்திரசேகர் உட்பட தேசிய மக்கள் சக்தியின் உறுப்பி னர்கள் கலந்து கொண்டனர். (நி-33)

## வாள்வெட்டுக்குழு அணிந்து வந்த உடைகள் மீட்பு

(சாவகச்சேரி)

சாவகச்சேரிப் பொலிஸாரால் நாவற்குழி-கோவிலாக்கண்டி காட்டுப் பகுதியில் மீட்கப்ப ட்ட காரில் இருந்து வாள்வெட் டுக் குழுவினர் அணிந்து வந்த உடைகள் மீட்கப்பட்டுள்ளன.

கடந்த வாரம் நாவற்குழி பகுதியில் உள்ள தனியார் எரி பொருள் நிரப்பு நிலையத்தில் கார் ஒன்றிற்கு கியூ.ஆர் இன்றி எரிபொருள் நிரப்ப மறுத்த தன் விளைவாக அன்றிரவே நிலைய ஊழியர் மீது வாள்வெ ட்டுத் தாக்குதல் நடத்தப்பட்டிரு ந்தது.

இது தொடர்பாக விசாரணை களை முன்னெடுத்த சாவகச் சேரிப் பொலிஸார் சம்பவத் துடன் தொடர்புடைய காரினை பூட்ட ப்பட்ட நிலையில் காட்டுப் பகுதி யில் இருந்து மீட்டிருந்தனர்.

அதன் பின்னர் கடந்த வெள் ளிக்கிழமை நீதிமன்ற உத்த ரவை பெற்று காரினை உடை த்து சோதனை செய்த போது வாள்வெட்டுக் குழுவினர் அணி ந்து வந்த இரண்டு ஆடைகள் மீட்கப்பட்டுள்ளன.

குறித்த கார் மிகிந்தலை பகு தியைச் சேர்ந்தவருடையது எனத் தெரிய வருகின்றது. (நி-30)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வலம்புரியின் வாரமலர்
சங்குநாதம்
நாதம் 385
Viber 076 636 3378



# உள்ளூராட்சி சபைத் தேர்தல்

# நடக்குமா? நடக்காதா?

**பிளவுகள், உடைவுகள், புதுக்கட்சிகள், சுயேட்சைகள் என பல்தரப்பட்ட விடயங்கள் உள்ளூராட்சிசபைத் தேர்தலில் நடப்பதால் அது மக்களுக்கு குழப்பங்களை ஏற்படுத்தியுள்ளது.**




• அபிமன்யு

ஒரு திரைப்படத்தில் வடிவேலு தேர்தலில் நிற்பார். தேர்தல் அன்று வாக்குச் சாவடிக்கு வெளியே நின்று வாக்களித்துவிட்டு வரும் தன் கட்சி ஆதரவாளர்களிடம் தனது கட்சிக்கு போட்டாயா என்பதை உறுதிப்படுத்திக் கொண்டிருப்பார்.

ஒருவர் விறுக்கு விறுக்கென்று வருகிறார். அவரை மறித்த வடிவேலு " டேய் யாருக்கடா. ஓட்டுப் போட்டாய் என்று கேட்க அவனும் உனக்கு தான் அண்ணா போட்டன் " என்பார்.

இல்லை நான் நம்ப மாட்டேன் என வடிவேலு மறுப்பார்.சத்தியமா உனக்குத்தான் போட்டேன் என்பான் அவன்.

அப்படியென்றால் எதிர்க்கட்சி ஆளிடம் என்ன கூறினாய் என வடிவேலு கேட்க "அவனுக்கு போட்டதென்று கூறினேன்" என்பர். என்னிடம் என்ன கூறினாய் என்று வடிவேல் கேட்க " உனக்கு போட்டது என்று கூறினேன் " என்று சொல்வார்.

இதில் எது உண்மை என்று கேட்டார் வடிவேலு. அதற்கு அவன் இரண்டும் உண்மை என்பான். குழம்பிய வடிவேலுவிடம் அவன் தெளிவாகக் கூறுவான்.

" அண்ண உன்னிடம் வாங்கிய காசுக்கு தென்னை மரச்சின்னத்தில ஒரு குத்து அவனிடம் வாங்கிய காசுக்கு ஏணிச்சின்னத்தில ஒரு குத்து " என.

அதிர்ந்து போன வடிவேலு அவனைப் போட்டு புரட்டி எடுப்பார்.

இது நகைச்சுவைக் காட்சி என்றாலும் மக்கள் மத்தியில் தேர்தல் தொடர்பில் விழிப்புணர்வு இல்லாததையும்.

ஓட்டுக்கு பணம் செலுத்தும் செயற்பாட்டையும் தெளிவுபடுத்துகிறது.

வடிவேலுவின் குறித்த நகைச்சுவை விடயம் போலத்தான் தற்போதைய உள்ளூராட்சி சபைத் தேர்தல் விடயமும் மாறி இருக்கிறது.

ஆம் கட்சிகளின் உடைவுகள் , பிளவுகள், தனிக்கட்சிகள், சுயேட்சைக்குழுக்கள் என பல் தரப்பட்ட வகையில் கட்சிகளும் சின்னங்களும் இருப்பதால் அது மக்களுக்கு பெரும் குழப்பத்தை ஏற்படுத்தியுள்ளது.

முதலில் தேர்தல் நடக்குமா? நடக்காதா? என்ற குழப்பம் மக்கள் மத்தியில் நிலவிக் கொண்டிருக்கும் இவ்வேளையில் தேர்தலை நடத்துவதற்கு பணம் இல்லை என அரசாங்கம் அறிவித்திருப்பது நகைப்புக்குரிய விடயமாக மாறியிருக்கிறது.

தேர்தல் நடத்துவதற்கு பணம் இல்லை எனின் தேர்தலுக்கான அறிவித்தலை அறிவித்திருக்கவே தேவையில்லை.

அதைவிடுத்து தேர்தலுக்கான திகதியை அறிவித்து கட்சிகள், சுயேட்சைக்குழுக்களை வேட்புமனுத் தாக்கல் செய்யச் செய்துவிட்டு இப்போது தேர்தல் இல்லை என்றால் அதன் பொருள் என்ன என்பதை புரிந்து கொள்ளவே முடியவில்லை.

தவிர தேர்தலுக்கான ஆயத்தங்களாக வேட்பாளர்கள் தங்கள் பிரதேச எல்லைக்குள் பிரசாரங்களைச் செய்யத் தொடங்கி பதாகையும் துண்டுப் பிரசுரங்களை விநியோகிப்பதையும் அவதானிக்க முடிகிறது.

இங்கு மேலும் ஒரு விடயத்தை கவனிக்கக் கூடியதாக இருக்கிறது.அதாவது உள்ளூராட்சி சபைகளில் போட்டியிடும் வேட்பாளர்களின் பேச்சுக்களைக் கேட்கும் போது தலைசுற்றுகிறது.

அதாவது உள்ளூராட்சி தேர்தலில் வெற்றி பெற்றால் ஒரு சபையினால் செய்யக் கூடிய செயற்பாடுகள் எவை என்ற எல்லை இல்லாது ஏதோ பிரதேச சபைகளே தமிழினத்தின் பிரச்சினைகளைத் தீர்க்கும் என்பதாய் பேசுவதைக் கேட்கும்போது இது பிரதேச சபைத் தேர்தலா அல்லது ஜனாதிபதித் தேர்தலா என எனச் சிந்திக்க வைக்கிறது.

ஏற்கனவே பிரதேச சபைகள் செயற்பாட்டில் இருந்த போது அவற்றினால் பொதுமக்களுக்கு ஏற்பட்ட நன்மைகள் எவை என பட்டியலிட்டால் மிகக்குறைந்த விளைவுகளையே தரும்.

தவிர கழிவகற்றல் செயற்பாடுகள், வீதிகள் செப்பனிடல்,வீதிவிளக்குகளை பொருத்துதல், மயானங்களை மேம்படுத்தல் ,பிரதேச மட்ட அமைப்புக்களை புனரமைத்தல் போன்ற செயற்பாடுகளை மேற்கொள்ள வேண்டிய பிரதேச, நகர சபைகள் அது தொடர்பில் பூரணமாக செயற்பட்டதா என்பதை கருத்தில் எடுக்க வேண்டும்.

வீதி விபத்துக்களால் நாளொன்றுக்கு எத்தனை உயிர்கள் அநியாயமாக அழிக்கப்படுகின்றது.இதில் தெரு நாய்களுடன் மோதுண்டு ஏற்படும் விபத்துக்களே முன்னிலை பெறுகின்றன.

தெரு நாய்களைக் கட்டுப்படுத்தும் செயற்றிட்டத்தை எந்த பிரதேச சபைகளும் செய்ததாய்த் தெரியவில்லை.

வட மாகாணத்தில் இரண்டு நாய்கள் காப்பகம் இருந்த போதிலும் கட்டாக்காலி நாய்களை காப்பகங்களில் சேர்க்கும் செயற்றிட்டத்தை எவராவது மேற்கொண்டனரா எனின் அது கேள்விக்குறியே.

மேலும் தெரு நாய்களுக்கான கருத்தடை செயற்றிட்டங்களை மேற்கொண்டனரா என்ற கேள்விகளும் இங்கு எழும்.

இச் செயற்றிட்டம் பூச்சியம் என்ற நிலையிலேயே உள்ளது.

தெரு நாய்களுக்கான கருத்தடை செயற்றிட்டத்தில் மாடுகளுக்கு இலக்கம் இடும் நடைமுறைகளைப் பேணி ஒரு திட்டத்தை மேற்கொண்டிருந்தால் இன்று தெரு நாய்களும் குறைந்திருக்கும். அவற்றினால் ஏற்படும் விபத்துக்களும் குறைந்திருக்கும்.

இவ்வாறு மக்கள் நலன் சார்ந்த திட்டங்களை மேற்கொள்ளாமல் இன்று பிரதேச சபை அடுத்தது வட மாகாண சபை அதற்கு அடுத்தது பாராளுமன்றம் என்ற சுயநல அரசியல் சிந்தனையுடன் செயற்பட்டால் அது ஒரு நாளும் விடிவைத் தராது.

நாடு இருக்கும் நிலையில் தேர்தல் தேவை தானா என வாதிடுபவர்களும் இருக்கவே செய்கின்றனர்.

ஒருவகையில் அதுவும் நியாயமானதாகவே தெரிகிறது.

தொங்கு பால ஆட்சியை வைத்துக் கொண்டு வெற்றி பெற்றுவிட முடியாது என்ற உண்மையைப் புரிந்து கொண்ட ஆட்சியாளர்கள் தேர்தலுக்கான அறிவித்தலையும் விட்டு அதை நிறுத்தவும் செய்கின்றார்கள்.

தேர்தலை அரசு நிறுத்தினால் அது பல பின்விளைவுகளைச் சந்திக்கும் என எதிர்க் கட்சிகள் கோசம் போடத் தொட ங்கியிருக்கும் நிலையில் அரசுக்கு புதிய தலையிடி ஆரம்பித்துள்ளது.தேர்தலுக்கு அரசிடம் பணம் இல்லை என்றால் நாம் பணம் தருகின்றோம் என பொது மக்கள் தேர்தல் திணைக்களத்திற்கு பணம் அனுப்பும் சுவாரசிய சம்பவங்களும் நாட்டில் பதிவாகியுள்ளன.

இவ்வாறு மக்கள் அனுப்பும் பணத்தில் தேர்தல் நடந்தால் அது உலக சாதனைப் பட்டியலில் இடம்பெறும் என்பது உண்மை. எது எவ்வாறாயினும் பிரதேச சபைத் தேர்தலை அரசு நடத்தியே ஆக வேண்டும்.

அதுவே மக்களின் விருப்பமும் கூட. தேர்தலின் பின் ஆட்சியமைக்கும் மாநகர , நகர, பிரதேச சபைகள் பலம் பொருந்தியதாக அமைந்தால் நன்று.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆலடி மாநாடு

வாத்தியார் வைத்திலிங்கம் தலைமையில் ஆலடி மாநாடு கூடியது. மாநாட்டு உறுப்பினர்களில் சாத்திரியார் சதாசிவத்தை தவிர மற்றெல்லோரும் ஆலடிக்கு வந்திருந்தனர்.

இறைவணக்கத்துடன் ஆலடி மாநாட்டை ஆரம்பிப்பம் என்று வாத்தியார் கூற, அனைவரும் எழுந்து நின்று இறை வணக்கம் செலுத்தி அமர்ந்தனர். தொடர்ந்து பண்டிதர் பரமலிங்கம் எழுந்தார்.

எங்கட தமிழர் தாயகத்தில ஒவ்வொரு நாளும் எருதுகளும் பசு மாடுகளும் களவாடப் படுகின்றன.

இது தொடர்பில ஆலடியில கடுமையான கண்டனத்தை தெரிவிக்க வேணும் எனக் கூறி அமர்ந்தார்.

பண்டிதர் இவ்வாறு திடீரெனக் கூறியதும் ஆலடியில் சிறிது நேரம் நிசப்தம் நிலவியது. நிசப்தத்தைக் கலைக்க விதானையார் விசுவலிங்கம் குரல் கொடுத்தார்.

**விதானையார்:** எங்கட பகுதிகளில மாடுகள் களவாடப்படுவது மிக வேகமாக நடக்கிறது என்பது உண்மை தான். ஆனால் மாடு வளர்ப்பவர்கள் இது தொடர்பில கவனம் செலுத்தினால் மட்டும் தான் மாட்டுக் களவை நிறுத்த முடியும்.

**கங்காணி:** என்ன விதானையார் சொல்லுறியள்?

**விதானையார்:** இஞ்சே கங்காணியார் மாடு வளர்ப்பவர்கள் அதனைச் சரியாகச் செய்ய வேண்டும். மாடுகளுக்கான கொட்டகைகள், தண்ணீர் வசதிகள், தீவனங்கள், தடை மருந்துகள் என அனைத்தும் ஒழுங்காகவும் சீராகவும் கிடைத்தால் தான் பசுக்களும் தாராளமாகப் பால் கறக்கும்.

ஆனால் எங்கட ஆட்களின்ர மாடு வளர்ப்பை நினைச்சால் வேதனைதான் மிஞ்சும்.

இந்தாப் பாருங்க, யாழ்ப்பாணத்தில எத்தனை நல்லினப் பசுக்கள் வீதிகளில கிடக்குதுகள். எண்டைக்கு கால்நடைத்தீவனம் விலையேறியதோ அண்டைக்கு மாடுகள அவிட்டு விட்டவியள் தான் அதன் பிறகு அந்த மாடுகளை அவர்கள் கொட்டிலில கட்டவேயில்லை.

**மூப்பர்:** என்ன விதானையார் சொல்லுறியள் அவையள் அவையள் தங்கட மாடுகளை வீடுகளில கட்டி வைப்பினம் தானே.

**விதானையார்:** அப்படிச் செய்தால் ஏன் களவு போகுது. இந்தாப் பாருங்க நல்லூரில எத்தனையோ நல்லினப் பசுக்கள் இரவிலும் வீதிகளில தான் கிடக்குதுகள். அதுகளுக்கு ஆன தீவனம் இல்லை, குடிதண்ணீர் இல்லை. யானை மாதிரி இருந்த பசுக்கள் எல்லாம் இப்ப ஒட்டி உறங்கி எலும்பும் தோலுமாகத் திரியுதுகள். இனி அதுகளின்ர ஆயுளுக்கு மாரகம் தான்.

**சிறாப்பர்:** இது தொடர்பில கால்நடை அபிவிருத்தி சார்ந்த அமைப்புக்கள் உரிய விழிப்புணர்வை ஏற்படுத்தி, கால்நடைகளுக்காக தற்போது அறிமுகமாகியுள்ள புல்லினங்களை வளர்க்கவும் மாடுகளை ஒழுங்காகப் பராமரிக்கவும் வழி வகுக்க வேணும்.

**விதானையார்:** அப்படி எங்க நடக்குது. இந்தாப் பாருங்க நம்ம மண்ணில எத்தனையோ மாடுகள் களவாடப் பட்டு விட்டன. இருந்தும் அது தொடர்பில சம்பந்தப்பட்டவர்கள் மௌனம் சாதிக்கினம்.


**சிறாப்பர்:** நாளாந்தம் மாடுகள் களவாடப் படுகின்றன என்பது உண்மை தான். மாட்டை வளர்ப்பவர்கள் அதனை விற்பனை செய்வதெண்டால் அல்லது வேற இடத்துக்கு தங்கட மாடுகளைக் கொண்டு செல்வதெண்டால் அதற்கான நடைமுறைகளை நிறைவேற்ற, போதுமெண்டாகிவிடும்.

ஆனால் மாட்டைக் களவெடுக்கிறவர்கள் மிகச் சிம்பிளாக மாடுகளைக் கடத்திக் கொண்டு போகினம்.

இவ்வாறு சிறாப்பர் கனகசபை கூற, அதனை ஏற்றுக் கொள்வது போல ஆலடியில் இருந்தவர்கள் மௌனம் சாதிக்க, மௌனத்தைக் கலைக்க வாத்தியார் வைத்திலிங்கம் குரல் கொடுத்தார்.

**வாத்தியார்:** பண்டிதர் சொன்னது போல மாடுகளைக் களவாடிச் செல்லுகின்ற செயலை ஆலடி மாநாடு வன்மையாகக் கண்டிக்கிறது.

இது விடயத்தில பொலிஸார் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கோருவதுடன் நல்லின மாடுகளை வளர்ப்பவர்கள் அவற்றைக் கட்டி வளர்ப்பதற்கும் அவற்றைத் தெருக்களில் விடாமல் வீடுகளில் வைத்துப் பராமரிப்பதற்கும் கால்நடைத் திணைக்களம் உரிய செயற்றிட்டங்களை வகுத்து அவற்றை நடைமுறைப்படுத்த வேண்டும் என்றும் தீர்மானம் கொண்டு வருவோம் எனக் கூற, அத்தீர்மானத்தை அனைவரும் ஏக மனதாக ஏற்றுக் கொண்டனர்.



## நாள்தோறும் நடக்கின்ற மாட்டுக் களவு தடுப்பாருமில்லை; தட்டிக் கேட்பாருமில்லை

தீர்மானம் நிறைவேற்றப்பட்ட கையோடு சாத்திரியார் சதாசிவம் ஆலடிக்கு வந்து சேர்ந்தார்.

சாத்திரியாரைக் கண்டதும் என்ன சாத்திரியார் ஆலடிக்கு வாறதில என்ன தாமதம். கங்காணி கார்த்திகேயன் விசாரித்தார்.

**சாத்திரியார்:** அதை ஏன் கேக்கிறியள். என்ர பேரனும் இந்த லோக்கல் கவர்மென்ட் எலெக்சனில நிக்கிறானல்லோ. எக்கச்சக்கமான நோட்டிசுகள அடிச்சுப் போட்டான். எலெக்சனும் பிந்திப் போகுது. அடிச்ச நோட்டிசுகளை இப்ப என்னண்டு ஒட்டுறது. அது தான் அடிச்ச நோட்டிசுகளைப் பார்சல் ஆக்கி வைச்சுப்போட்டு வந்ததில லேட்டா போயிட்டுது.

**பண்டிதர்:** அதுசரி தேர்தல் நடக்குமோ?

**வாத்தியார்:** மார்ச் மாதம் 3 ஆம் திகதி எலெக்சன் டேட் அறிவிக்கிறதாகச் செய்திகள் வந்திருக்குது.

எதுக்கும் பொறுத்திருந்து தான் பார்க்க வேணும்.

**சாத்திரியார்:** எலெக்சன் நடத்தாவிட்டால், நாட்டில் மீண்டும் கலம்பகங்கள் நடக்கும்.

அதனால எப்பாடுபட்டும் எலெக்சனை நடத்தியே ஆக வேணும் எண்டு தான் நான் சொல்லுவன்.

**மூப்பர்:** அது சரி எங்கட யாழ்ப்பாணத்தில தண்ணீர்ப் பைப்புகளை கிடங்கு வெட்டித் தாழ்க்கினம்.

உந்த வேலை வலு வேகமாக நடக்குது.

அதிலும் அந்த வேலையில ஈடுபட்டுள்ள பணியாளர்கள் இராப்பகலாக வேலை செய்யினம்.

அதிலும் அவர்கள் இரவு வேலை செய்யிறதாலதான் போக்குவரத்துக்கு இடைஞ்சல் இல்லாமல், வீதியோரமாக நீர்க் குழாய்களைத் தாழ்க்க முடியுது.


இல்லை எண்டால், ஒரே குழப்பமாகத்தான் இருக்கும்.

நல்லது எங்க நடந்தாலும் அவற்றை வரவேற்கிறதில நாங்கள் பின்னிற்கக் கூடாது.

இவ்வாறு வாத்தியார் கூற, அதனைத் தானும் ஆமோதிப்பது போல் ஆலடிப் பிள்ளையார் கோவில் கண்டாமணியும் ஒலிக்க, ஆலடியில் இருந்தவர்கள் எழுந்து கோவிலுக்குச் சென்றனர்.

ஆதித்தன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வியாசரே நரிகளை மனிதன் நம்பலாமா சொல்லுங்கள்?

**சங்கரசிவன் — வதிரி**

**கூட்டமைப்பு எது என்று குழப்பமாக உள்ளதே வியாசரே?**

இந்தக்குழப்பம் உங்களுக்கு மட்டுமல்ல. கூட்டமைப்பினருக்கும் இருக்கிறது சிவன். ஆதலால் நாம் இது தொடர்பில் கவலைப்பட தேவையில்லை.
உன் நண்பனைப் பற்றி அறிய வேண்டுமென்றால் அவனுடன் ஒரு நாள் பகைத்துப்பார் என்றொரு பழமொழி உண்டு.
அப்போது தான் உன் நண்பன் உன்னைப் பற்றி என்ன கருத்து வைத்திருக்கிறான் என்று புரியும்.
நண்பர்களாய் இருந்த கூட்டமைப்பினர் எதிரிகளான பின்னர் எவ்வாறு நடந்து கொள்கிறார்கள் என்பதை இப்போது பார்க்கின்றீர்கள் தானே.

**சுதன் — குப்பிழான்**

**அரச உத்தியோகத்தை விட்டுவிட்டு தேர்தலில் நிற்கிறவர்கள் குடும்பங்களில் சண்டை தொடங்கி விட்டதே?**

ஜனாதிபதியினால் கூட தீர்த்து வைக்க முடியாத தமிழினத்தின் பிரச்சினைகளை பிரதேசசபைத் தேர்தலில் வென்றால் நான் செய்து முடிப்பேன் என ஒரு பிரதேச சபை தேர்தல் வேட்பாளர் சொன்னால் இதை விட வேறு உருட்டு இருக்குமோ?
முதலில் பிரதேச சபையின் எல்லை எது என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும்.
இவற்றைப் புரிந்து கொள்ளாது ஏதோ தாம் தான் தமிழினத்தின் பாதுகாவலர்கள் என்றும் பேசுகிறார்கள்.
இவர்களின் செயற்பாட்டினைப் பார்த்தால் சிரிப்புத்தான் வரும்.
சரி பிழைத்துப் போகட்டும் என்று விட்டுவிடுவோமே இவர்களை.

**அகிலன் — கனகராஜன்குளம்**

**தேர்தல் பிற்போடப்பட்டதற்கு ஆட்சியாளர்களின் தோல்விப் பயமா காரணம் வியாசரே?**

தேர்தலுக்கு திகதி குறித்து பிள்ளையைக் கிள்ளிய அதே ஆட்சியாளர்கள் தான் தேர்தலுக்குப் பணம் இல்லை என்று தொட்டிலையும் ஆட்டியிருக்கிறார்கள்.
தேர்தல் நடக்கும் என்ற நம்பிக்கையில் வேட்புமனுத் தாக்கல் செய்த கட்சிகளின் நிலை தான் படுமோசமானது.
பணம் இல்லை என்ற பின்னர் இனி எப்படி தேர்தலை நடத்த முடியும் சொல்லுங்கள்.
ஆதலால் இத்துடன் தேர்தல் நாடகம் நிறைவு பெற்றது என்னும் அறிவித்தலை அறிவிக்க வேண்டியது தானே.




அன்பு வாசகர்களே!
உங்கள் எண்ணத்தில் தோன்றிய கேள்விகளை
**076 097 3126**
என்ற இலக்கத்திற்கு SMS செய்யுங்கள்

**மதுவன் — மீசாலை**

**வியாசரே நரிகளை மனிதன் நம்பலாமா சொல்லுங்கள்?**

நரி தந்திரம் நிறைந்த மிருகம். வேட்டையாடுவதில் அதிக அக்கறை காட்டாத நரிகளுக்கு சிங்கம், புலி போன்ற மிருகங்கள் வேட்டையாடிய இரையின் எச்சங்களை சாப்பிடு வதில் அலாதிப்பிரியம்.
ஆதலால் தான் என்னமோ அவைகள் வேட்டையாட விரும்பியதுமில்லை. ஈடுபட்டதுமில்லை.
இவ்வாறு தண்டித் தின்னும் நரிகளை நம்பினால் நாம் நடுத்தெருவில்தான் நிற்க வேண்டும்.
ஆதலால் இவர்களைக் கொஞ்சம் தள்ளி வைப்பது தான் எமக்கும் எம் எதிர்காலத்திற்கும் நல்லது.

**ரச்சிதா — வதிரி**

**தங்களுக்கு பெப்ரவரி 14 விசேட நாளாம் உண்மையா வியாசரே?**

காதலர் தினம் கொண்டாடுவது பெரிய விடயமல்ல. ஒவ்வொரு வருடமும் ஒருத்தியுடன் கொண்டாடுவதே பெரிய விடயம்.
இது ஒரு ரகம் என்றால் பெப்ரவரி மாதம் என்றதும் காதலர் தினம் நினைவுக்கு வந்தால் அவன் மனிதன்.
28 நாட்கள் வேலை செய்து விட்டு 31 நாள் சம்பளம் எடுப்போம் என நினைத்தால் அவன் பெரிய மனிதன்.
இரண்டாவது ரகம் வியாசரும். இதில் எள்ளளவும் சந்தேகமில்லை.



தேர்தல் பிற்போடப்பட்டதற்கு ஆட்சியாளர்களின் தோல்விப் பயமா காரணம் வியாசரே?

**வம்சினி — சுன்னாகம்**

**படிப்பின் முக்கியத்துவத்தைப் பற்றி கூறுங்களேன் வியாசரே?**

அது படிக்கும் போது தெரியாது. படிப்பை கைவிட்டு வாழ்வில் கஷ்டப்படும் போது தான் அதன் அருமை புரியும்.
அப்போது எமது கையில் எதுவுமிருக்காது. எல்லாம் கை மீறி போய்விடும்.
அதன்பின் நாம் மற்றவருக்கு அறிவுரை கூற முயல்வோம். அங்கே அவமானப்பட்டு தலைகுனிந்து நிற்போம்.
ஆதலால் படிக்கும் வயதில் படித்து உழைக்கும் வயதில் உழைத்து பணம் சேர்க்கும் வயதில் சேர்த்து அதை செலவு செய்யும் வயதில் செலவு செய்து வாழ்வை வாழ்வதற்கு கல்வி முக்கியம்.
கற்றவனுக்கு சென்ற இடமெல்லாம் சிறப்பு.

**திகான் — வடமராட்சி**

**உண்மையான தியாகங்கள் ஒரு நாளும் தோற்பதில்லை என்பதற்கும் பழ.நெடுமாறன் ஐயாவின் கருத்துக்கும் உங்கள் கருத்தென்ன?**

அது என்ன நம்பிக்கை எனத் தெரியவில்லை. அவர் உயிருடன் இருக்கிறார் என்பதில் இவர் மிகத் தீவிரமாக இருக்கிறார்.
தியாகம் என்பது தான் கொண்ட கொள்கையில் இருந்து சற்றும் மாறாததே. அதுவே ஒரு தலைவனுக்கு இருக்கும் மிகப் பெரிய பெருமை.
இதில் எம் தலைவன் எம்மை விட்டுவிட்டு தன் உயிர் காக்க ஓடியிருக்க மாட்டான் என வாதம் செய்பவர் பக்கமே இந்த வியாசரும்.
இது நூறு வீத உண்மை.

**பாண்டியன் — கிளிநொச்சி**

**பழைய அரிசியா? புதிய அரிசியா? மதிப்பானது வியாசரே?**

Old is Gold என்று கூறுவார்கள். அது அனைத்திற்கும் பொருந்தி விடாது. நீங்கள் கேட்ட கேள்விக்கும் இதுதான் பதிலாகிறது.
ஆம், அரிசி பழையதாக இருந்தால் அவற்றில் வண்டுகள், புழுக்கள் இருக்க வாய்ப்புண்டு.
அப்பேற்பட்ட அரிசியை சமைத்து உண்டால் அது மனித குலத்துக்கு அவ்வளவு நல்லதில்லையே.
ஆதலால் பழைய வண்டு பிடித்த அரிசிகளைத் தவிர்த்து நல்ல நேர்மையான சிறந்த அரிசிகளை தேர்ந்தெடுப்போம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காலத்தால் அழியாத கானங்கள்

திரைப்படம்: ஆனந்த ஜோதி
பாடியவர்: பி.சுசீலா
இயற்றியவர்: கவிஞர் கண்ணதாசன்
இசை: எம்.எஸ்.வி இராமமூர்த்தி



நினைக்கத் தெரிந்த மனமே
உனக்கு மறக்கத் தெரியாதா
பழகத் தெரிந்த உயிரே
உனக்கு விலகத் தெரியாதா
உயிரே விலகத் தெரியாதா

நினைக்கத் தெரிந்த மனமே
உனக்கு மறக்கத் தெரியாதா...

மயங்கத் தெரிந்த கண்ணே
உனக்கு உறங்கத் தெரியாதா
மலரத் தெரிந்த அன்பே
உனக்கு மறையத் தெரியாதா
அன்பே மறையத் தெரியாதா

நினைக்கத் தெரிந்த மனமே
உனக்கு மறக்கத் தெரியாதா...

எடுக்கத் தெரிந்த கரமே
உனக்கு கொடுக்கத் தெரியாதா
இனிக்கத் தெரிந்த கனியே
உனக்கு கசக்கத் தெரியாதா
படிக்க தெரிந்த இதழே
உனக்கு முடிக்கத் தெரியாதா
படரத் தெரிந்த பனியே
உனக்கு மறையத் தெரியாதா
பனியே மறையத் தெரியாதா

நினைக்கத் தெரிந்த மனமே
உனக்கு மறக்கத் தெரியாதா...

கொதிக்கத் தெரிந்த நிலவே
உனக்கு குளிரத் தெரியாதா
குளிரும் தென்றல் காற்றே
உனக்கு பிரிக்கத் தெரியாதா
பிரிக்கத் தெரிந்த இறைவா
உனக்கு இணைக்கத் தெரியாதா
இணையத் தெரிந்த தலைவா
உனக்கு என்னைப் புரியாதா
தலைவா என்னைப் புரியாதா

நினைக்கத் தெரிந்த மனமே
உனக்கு மறக்கத் தெரியாதா...

# உக்கிரமாகப் போகிறதா உக்ரைன்-ரஷ்யா மோதல்?

**"ரஷ்யாவுக்கும் உக்ரைனுக்குமான போரின் ஓராண்டு நிறைவுக்கு முன்னதாக உக்ரைனுக்கு வலுவான ஆதரவை அமெரிக்கா வழங்கும்" என ஜனாதிபதி வொலோடிமிர் ஜெலன்ஸ்கிக்கு உறுதியளித்தார் ஜோ பைடன்.**

"நேட்டோ" படையில் இணையப்போவதாக உக்ரைன் அறிவித்து, மேலும் அதற்கான முயற்சியிலும் தீவிரமாக ஈடுபட்டு வந்தது. இதற்கு ரஷ்ய ஜனாதிபதி புடின் கடும் கண்டனம் தெரிவித்து வந்தார். அப்போது அவர், "உக்ரைன் தனது முடிவை மாற்றிக் கொள்ள வேண்டும். இல்லை யென்றால் கடுமையான பின்விளைவுகளை சந்திக்க நேரிடும்" என்று தெரிவித்திருந்தார். ஆனால், அந்த நாடு தனது முடிவிலிருந்து பின் வாங்கவில்லை. இதையடுத்து, உக்ரைனுக்கு எதிரான இராணுவ நடவடிக்கைக்கு புடின் உத்தரவிட்டார்.

கடந்த ஆண்டு பெப்ரவரியில் தொடங்கிய போர், தொடர்ந்து நடந்துவருகிறது. மறுபுறம் அமெ ரிக்கா, ஜேர்மனி உள்ளிட்ட மேற்கு நாடுகள், உக்ரைனுக்கு உதவி செய்து வருகின்றன. இதனால் இரண்டு தரப்பிலும் கடுமையான சேதம் ஏற்பட்டிருக்கிறது. இதற்கிடையில், உக்ரைனுக்கு 500 மில்லியன் டொலர் மதிப்பு கொண்ட ஆயுதங்களை வழங்க அமெரிக்கா திட்டமிட்டிருக்கிறது. மறுபுறம் ரஷ்யாவுடன் சீனா கைகோத்திருக்கிறது.

**"ஜோ பைடனின் சர்ப்ரைஸ் விசிட்"**

ரஷ்யாவுக்குத் தேவையான ஆயுத உதவிகளை சீனா விரைவில் வழங்கும் என்ற தகவல் வெளியாகியிருக்கிறது. இதையடுத்து, வரும் காலங்களில் உக்ரைனுக்கு எதிரான ரஷ்யாவின் போர் மேலும் உக்கிரமடையும் எனச் சர்வதேச அரசியல் நோக்கர்கள் கருத்து தெரிவித்திருக்கிறார்கள்.

அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் கடந்த 20 ஆம் திகதி "கீவ்" நகருக்கு எவ்விதமான முன்னறிவிப்பின்றி பயணம் செய்தார். அப்போது அவர், "ரஷ்யாவுக்கும் உக்ரைனுக்குமான போரின் ஓராண்டு நிறைவுக்கு முன்னதாக உக்ரைனுக்கு வலுவான ஆதரவை அமெரிக்கா வழங்கும்" என ஜனாதிபதி வொலோடிமிர் ஜெலன்ஸ்கிக்கு உறுதியளித்தார். அப்போது ரஷ்யா ஏவுகணை அல்லது வான்வழித் தாக்குதல்கள் எதுவும் நடத்தவில்லை.

**500 மில்லியன் டொலருக்கு உதவி:**

இருந்தபோதிலும் தலைநகர் முழுவதும் சைரன்கள் ஒலித்தன. அப்போது பேசிய பைடன், "கிட்டத்தட்ட ஒரு வருடத்துக்கு முன்பு புடின் தனது படையெடுப்பைத் தொடங்கிய போது, உக்ரைன் பலவீனமாக இருப்பதாகவும் மேற்கு நாடுகள் பிளவுபட்டிருப்பதாகவும் நினைத்தார். எங்களை மிஞ்சலாம் என்றும் நினைத்தார். ஆனால், அவர் தவறு செய்துவிட்டார். ரஷ்யாவின் படையெடுப்பை எதிர்ப்பதில் உக்ரைனியர்கள் துணிச்சலாக இருப்பது பாராட்டுதலுக்குரியது. உக்ரைனின் தியாகங்கள் மிகப் பெரியவை.

கடினமான நாள்கள், வாரங்கள் மற்றும் வருடங்கள் வரவிருக்கும் என்பதை நாங்கள் அறிவோம். எனவே, பீரங்கி வெடிமருந்துகள், கவச எதிர்ப்பு அமைப்புகள் மற்றும் வான் பாதுகாப்பு ரேடார்கள் உட்பட மேலும் 500 மில்லியன் டொலர் மதிப்புள்ள ஆயுதங்கள் வழங்கப்படும். ரஷ்யா மீது மேலும் கடுமையான தடைகள் விதிக்கப்படும்" என்றார். பின்னர் ஜெலன்ஸ்கி, "அமெரிக்க ஜனாதிபதி பைடனின் வருகை அனைத்து உக்ரைனியர்களுக்கும் ஆதரவளிப்பதற்கான மிக முக்கியமான அடையாளம்" என்றார்.



**ரஷ்யாவுக்கு வரும் சீன வெளியுறவு மந்திரி...**

இதற்கிடை யில், ரஷ்ய தலைநகருக்கு சீன வெளியுறவு மந்திரி வாங் யி வருவார் என்று எதிர்பார்க் கப்படுகிறது. முன்னதாக ரஷ்யாவுடன் வரம்புகள் இல்லா நட்பு ஒப்பந்தத்தில் கையொப் பமிட்ட போதிலும், சீனா இது வரை மோதலில் நடுநிலை வகிக்கிறது.

இருப்பினும் விரைவில் சீனா, ரஷ்யாவுக்கு ஆயுதங்களை வழங்கத் தொடங்கலாம் என்று அமெரிக்கா கூறியிருக்கிறது.

**ரஷ்யாவுக்கு இழப்பு:**

இதற்கிடையில், உக்ரைனின் டான்பாஸ் சுரங்கம் மற்றும் தொழில்துறை பகுதியை உருவாக்கும் இரண்டு கிழக்கு மாகாணங்களின் முழு கட்டுப்பாட்டைப் பெற ரஷ்யா முயன்று வருகிறது. இதற்காக வடக்கில் கிரெமின்னாவிலிருந்து தெற்கில் வுஹ்லேதார் வரை இயங்கும் இடங்களில் தாக்குதல்களைத் தொடங்கியிருக்கிறது. வரும் மாதங்களில் திட்டமிட்ட எதிர்த்தாக்குதலுக்கு திட்டமிட்டிருக்கும் உக்ரைன், மேற்கத்தேய நாடுகளின் ஆயுதங்களின் பெரும் வரவுகளை சேகரித்துக் கொண்டிருக்கிறது.

சமீபகாலமாக முக்கியமாக போர்க்களத்தில் தற்காப்புப் பணியில் ஈடுபட்டு, தாக்குதல் நடத்தும் ரஷ்யப் படைகளுக்குப் பெரும் உயிரிழப்புகளை ஏற்படுத்துவதாகவும் அந்த நாடு தெரிவித்திருக்கிறது.

**அரசியல் அழுத்தத்தில் ரஷ்யப் படைகள்:**

இது தொடர்பாக பிரிட்டனின் பாதுகாப்பு அமைச்சகம், "இந்தப் போரினால் ரஷ்யா பெரும் உயிரிழப்புகளைச் சந்தித்து வருகிறது. இதில் இரண்டு உயரடுக்கு படையணிகள் உட்பட ஆயிரக்கணக்கான கடற்படையினர் உக்ரைனிய கோட்டையான வுஹ்லேடரைத் தாக்குவதற்கான முயற்சியில் தோல்வியுற்றிருக்கிறார்கள். எனவே, இந்தப் போர் பயனற்றதாக இருக்கலாம். படையெடுப்பின் ஆண்டுவிழா நெருங்கி வருவதால் ரஷ்யப் படைகள் அரசியல் அழுத்தத்துக்கு உள்ளாகக் கூடும்.

மேற்கத் தேய அரசுகள், "கிழக்கு மற்றும் தெற்கு முனைகளின் சந்திப்பில் உக்ரைனியப் படைகள் காத்துக் கொண்டிருக்கும் வுஹ் லேடார் மீதான ரஷ்யத் தாக் குதல்கள் தோல்வியடைந்தது. கண்ணி வெடிகள் வைக்கப்பட்ட வயல்களில் அதைத் தாக்க முயன்ற ஆயிரக்கணக்கான வீரர்களையும் ஏராளமான கவசவாகனங்களையும் ரஷ்யா இழந்திருக்கிறது" என்று தெரிவித்திருக்கிறது.

நீண்ட தூர ரொக்கெட்டுகள் மற்றும் போர் விமானங்கள் உட்பட பலவற்றை உக்ரைன் விரும்புகிறது. மேற்கத்தேய நாடுகள் ஜெட் விமானங்களை அனுப்பும் முடிவின் விளிம்பில் இருப்பதாக உக்ரைன் கூறி வருகிறது. இருப்பினும் இதற்கான முடிவு எப்போது அறிவிக்கப்படும் என்பதும் எத்தனை விமானங்கள் ஒப்படைக்கப்படவிருக்கிறது என்பதும் அவற்றில் என்ன வகையான ஆயுதங்கள் இருக்கும் என்பது முக்கியமான கேள்விகளாக இருக்கின்றன.

இந்த நடவடிக்கைகளால் மோதல் மேலும் தீவிரமடையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரபாகரன் வருவார்

## பழ.நெடுமாறன் நம்பிக்கை

“விடுதலைப் புலிகள் இயக்கத் தலைவர் பிரபாகரன் உயிரோடு இருக்கிறார். விரைவில் வெளியே வருவார்" என்று தெரிவித்திருக்கிறார் உலகத்தமிழர் பேரமைப்பின் தலைவர் பழ.நெடுமாறன். 2009 இல் இறுதிப் போரில் பிரபாகரன் கொல்லப்பட்டார் என்று இலங்கை இராணுவம் அறிவித்த காலத்தில் இருந்தே, இக்கருத்தைத் தெரிவித்துவரும் பழ.நெடுமாறன், “இப்போது காலம் கனிந்திருக்கிறது. விரைவில் பிரபாகரன் ஒரு அரசியல் செயற்திட்டத்தோடு வெளியில் வருவார்" என்று அறிவித்திருக்கிறார். உலகெங்கும் இது பேசுபொருளாகியிருக்கிறது. இச்சூழலில், பழ.நெடுமாறன் ஜூனியர் விகடனுக்கு வழங்கிய செவ்வியை அப்படியே தருகின்றோம்.

**“பிரபாகரன் இறுதிப்போரில் கொல்லப்பட்டதற்கு டி.என்.ஏ முடிவு உட்பட பல ஆதாரங்கள் தங்களிடம் இருப்பதாக இலங்கை இராணுவம் சொல்கிறது. தற்போது உயிரோடிருக்கும் பிரபாகரனுக்கு நெருக்கமான போராளிகளே கூட நீங்கள் சொல்வதை ஏற்கவில்லை. எந்த அடிப்படையில் இப்படிச் சொல்கிறீர்கள்?”**

“65 ஆண்டு காலப் பொது வாழ்க்கையில் ஆதாரம் இல்லாமல் எதையும் சொன்னதில்லை. பிரபாகரன் இறக்கவில்லை என்று அப்போதும் சொன்னேன். இப்போதும் சொல்கிறேன். சிங்கள அரசு தொடர்ந்து பொய் பரப்புகிறது. 1984, செப்டெம்பர் 5 ஆம் திகதி சிங்களப் படையால் பிரபாகரன் சுட்டுக் கொல்லப்பட்டார் என்றார்கள். இரண்டே நாட்களில் அந்தச் செய்தி பொய்யானது.



1989 ஜூலை 25 ஆம் திகதி, பிரபாகரனுக்கும் மாத்தையாவுக்கும் நடந்த மோதலில் பிரபாகரன் சுட்டுக்கொல்லப்பட்டார் என்று இந்தியப் பத்திரிகைகளும் கூட செய்தி வெளியிட்டன. அதுவும் இரண்டே நாட்களில் பொய்த்துப் போனது. சுனாமி நேரத்திலும் இப்படிச் சொன்னார்கள். அதுவும் பொய்யானது. 2007 டிசெம்பர் 15 ஆம் திகதி சிங்கள விமானப்படைத் தாக்குதலில் பிரபாகரன் படுகாயமடைந்ததாகவும் பிழைக்க வாய்ப்பில்லை என்றும் இலங்கைப் பாதுகாப்புத் துறை அறிவித்தது. அந்தச் செய்தியும் வழக்கம் போலவே பொய்யானது.

2009 மே 17 ஆம் திகதி முள்ளிவாய்க்கால் இறுதிக்கட்டப் போரில் பிரபாகரனும் முக்கியத் தளபதிகளும் கொல்லப்பட்டதாகச் சிங்கள இராணுவம் அறிவித்தது. பிரபாகரன் என்று அடையாளம் காணப்பட்ட ஒரு உடலை எடுத்துச் சென்று ஆய்வு செய்து வருவதாக சிங்கள இராணுவ அதிகாரி ஒருவர் சொன்னார். மறுநாளே, பிரபாகரன் இறந்து விட்டதாகவும் பிரபாகரன், பொட்டு அம்மான் உடல்கள் கிடைத்தன என்றும் சொன்னார். அந்த உடல்களுக்கு மரபணு சோதனை செய்த பிறகு உறுதிப்படுத்தப்படும் என்று அறிவித்தார். 11 மணிக்கு அவர் இதைச் சொல்ல, 12.15 மணிக்கு மரபணு சோதனை மூலம் அது பிரபாகரன் உடல் தான் என்று உறுதி செய்து விட்டதாக இராணுவத் தளபதி பொன் சேகாவும் இலங்கை அரசும் அறிவித்தார்கள். ஒருமணி நேரத்துக்குள் டி.என். ஏ சோதனை நடத்தி முடிவு அறிவிக்கும் தொழில்நுட்பம் எங்குமே இல்லை.

இறுதிப்போரின் வெற்றியைக் கொண்டாடும் வகையில் கூட்டப்பட்ட இலங்கை பாராளுமன்றக் கூட்டத்திலும் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ பிரபாகரன் கொல்லப்பட்டது பற்றி எதுவும் பேசவில்லை. உண்மையில் பிரபாகரன் இறந்திருந்தால் அவரது உடலைக்கொழும்புக்குக்கொண்டு வந்து சிங்கள மக்கள், வெளிநாட்டுத் தூதர்கள், சர்வதேசப் பத்திரிகையாளர்களின் பார்வைக்கு வைத்திருப்பார்கள். பொய்யான் உடலைக் காட்டி அம்பலமாகிவிட்டால் என்னாவது என்பதால்தான் அவ்வாறு செய்யவில்லை.

இன்னொரு முக்கியச் செய்தி. மே 18 வரை இறுதி யுத்தம் நடந்தது. மே 20 ஆம் திகதி, புலம்பெயர்ந்து தலைமறைவாக வாழும் கே.பிஎனப்படும் கே.பத்மநாபன் என்னைத் தொடர்பு கொண்டு, பிரபாகரன் வீரமரணம் அடைந்து விட்டதாகவும் உலகமெங்கும் இருக்கும் தமிழர்கள் ஒரு வாரம் துக்கம் கடைப்பிடிக்க வேண்டும் என்று அறிவிக்கப் போவதாகவும் சொன்னார். நான் கடுமையாகக் கண்டித்தேன். பிரபாகரனுக்கு ஏதாவது ஆகியிருந்தால் அவரோடு களத்தில் நின்ற தளபதிகளோ புலிகள் அமைப்பின் உயர்மட்டக் குழுவோ அதை அறிவித்திருப்பார்கள். போர்க்களத்தில் இல்லாத நீங்கள் எந்த அடிப்படையில் இதைச் சொல்கிறீர்கள் என்று கேட்டேன். ஆனாலும் அவர் அறிவித்தார். உலகின் எந்த நாட்டிலும் தமிழர்கள் துக்கம் கடைப்பிடிக்கவில்லை. உலகெங்கும் உள்ள ஈழத் தமிழர்களின் நம்பிக்கையையும் ஒற்றுமையையும் சிதைக்கவே பிரபாகரன் இறந்ததாகச் செய்தியைப் பரப்பினார்கள். பிரபாகரன் உயிரோடிக்கிறார் என்பதே உண்மை."

**“பிரபாகரனோடு நெருக்கமான தொடர்பில் இருந்தவர் நீங்கள். பாலச்சந்திரன் கொலை, பல்லாயிரம் மக்கள் கொல்லப்பட்டதையெல்லாம் பார்த்த பிறகும் தலைமறைவாக இருக்கும் இயல்புடையவரா அவர்?”**



“பிரபாகரனின் அண்ணன் மனோகரன் நோர்வேயில்தான் இருக்கிறார். அவரிடம் ‘போர் முற்றிய கட்டத்திலாவது பிரபாகரன் பிள்ளைகளை உங்களிடம் அனுப்பி வைத்திருக்கலாமே”. என்று பத்திரிகையாளர்கள் கேட்டபோது, ‘என் மக்களுக்கும் அவர்களின் குழந்தைகளுக்கும் என்ன நேர்கிறதோ, அதுவே எனக்கும் என் குழந்தைகளுக்கும் நேரட்டும்" என்று பிரபாகரன் சொன்னதாகச் சொன்னார். இறுதி யுத்த நேரத்தில் ஈழத்தில் இருந்த பெற்றோர் பற்றிக்கூட பிரபாகரன் கவலைப்படவில்லை. அவருக்குத் தன் பிள்ளையும் தம் மக்களின் பிள்ளையும் ஒன்றுதான். யுத்தக்களத்தில் எத்தனையோ தந்திரங்கள் கையாளப்படும். அதில் ஒன்றுதான் பிரபாகரன் அங்கிருந்து வெளியேற்றப்பட்டது. மூத்த தளபதிகள் கட்டாயப்படுத்தி அவரை அங்கிருந்து வெளியே அனுப்பி வைத்தார்கள். அதுதான் உண்மை."

**“பிரபாகரன் யுத்தக்களத்திலிருந்து தப்பித்தார் என்றால் எந்த நாட்டிலாவது அடைக்கலம் கோரியிருக்க வேண்டும். இந்த 14 ஆண்டுகளில் அதுமாதிரி செய்தி எதுவும் வரவில்லையே?”**

“2009 காலகட்டத்தில் சர்வதேச அரசியல் சூழல் புலிகளுக்கு எதிராகவே இருந்தது. அமெரிக்க இரட்டைக் கோபுரத் தாக்குதல் நடந்த பிறகு உலகம் முழுவதுமே நிலை மாறிவிட்டது. இந்தியா உட்பட 20 இற்கும் மேற்பட்ட நாடுகள் சிங்கள அரசுக்கு உதவிகள் செய்தன. அந்தக் காலகட்டத்தில் எந்த நாட்டிடமும் வெளிப்படையாக அடைக்கலம் கோரும் நிலை இல்லை. இன்று காலம் கனிந்திருக்கிறது. சர்வதேச சூழல் மாறியிருக்கிறது. இலங்கையில், ராஜபக்ஷவை ஆட்சிபீடத்தில் அமரவைத்துக் கொண்டாடிய மக்களே இன்று அவரை அகற்றியிருக்கிறார்கள். சிங்கள மக்களுக்கு இப்போதுதான் உண்மை புரிகிறது. இந்தியாவிலும் அரசியல் சூழல் மாறிக் கொண்டிருக்கிறது. இதுதான் தக்க சூழல். எல்லாவற்றையும் கலந்தாலோசித்துத்தான் பிரபாகரன் உயிரோடு இருக்கும் செய்தியை இப்போது வெளியிட்டேன்."

**“மத்திய அமைச்சர் முருகன் இலங்கையில் இருக்கும் போது பிரபாகரன் குறித்து அறிவிக்கிறீர்கள். பா.ஜ.க தலைவர் அண்ணாமலையுடன் நெருக்கம் காட்டுகிறீர்கள். நெடுமாறன் இந்திய உளவுப் பிரிவின் சதிக்குத் துணைபோய் விட்டார்" என்ற குற்றச்சாட்டுக்கு உங்கள் பதில்?”**

“அபத்தமான கேள்வி. இருந்தாலும் இந்தக் கேள்விக்குப் பதிலாக இன்னொரு வரலாற்றை உங்களுக்கு நினைவூட்டுகிறேன். வாஜ்பாய் தலைமையில் பா.ஜ.க அரசு அமைந்திருந்த போது பாதுகாப்புத்துறைஅமைச் சராக ஜார்ஜ் பெர்னாண்டஸ் இருந்தார். அவர்தான் பா.ஜ.க கூட்டணிக்கு கன்வீனர். பல நெருக்கடியான காலகட்டத்தில் ஈழத்தமிழர்களுக்கு உதவியவர் அவர்தான். அப்போது இந்தியக்கடற்படையின் தலைமைத் தளபதியாக இருந்தவர் அட்மிரல் விஷ்ணு பகவத். இலங்கைக் கடற்பரப்பையும் சேர்த்துப் பாதுகாத்த அவரைப் பதவி நீக்கம் செய்தார் ஜார்ஜ் பெர்னாண்டஸ். வெளியே போன விஷ்ணு பகவத், ‘பெர்னாண்டஸ் விடுதலைப் புலிகளுக்கு ஆதரவாகச் செயற்படுகிறார்" என்று வெளிப்படையாகக் குற்றம் சாட்டினார். ஆனால் பெர்னாண்டஸ் உறுதியாக இருந்தார். அப்போது பா.ஜ.க அமைச்சரவையில் இருந்த பெர்னாண்டஸை இங்கிருந்த எல்லோரும் பாராட்டினார்கள். அப்போது ஒரு பேச்சு, இப்போது ஒரு பேச்சா?"

**“இன்னும் இராணுவ முற்றுகைக்குள் தான் ஈழத்தமிழ் மக்கள் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். உங்களுடைய அறிவிப்பு, அவர்களை மேலும் நெருக்கடிக்கு உள்ளாக்காதா?”**

“நான் அப்படி நினைக்கவில்லை. பிரபாகரன் உயிரோடிருக்கிறார் என்ற அறிவிப்பு அவர்களை உற்சாகமாக்கியிருக்கிறது. புதிய நம்பிக்கை பிறந்திருக்கிறது."

**“ஒருவேளை நீங்கள் சொல்வது போல பிரபாகரன் உயிருடன் இருப்பதாகவே வைத்துக் கொள்வோம். இன்றைய சூழலில் பிரபாகரன் என்ன செய்ய வேண்டும்? இந்திய அரசு என்ன செய்ய வேண்டும்?”**

“பிரபாகரன் என்ன செய்யவேண்டும் என்பதை அவர்தான் முடிவெடுப்பார். அவர் என்ன முடிவெடுத்தாலும் உலகம் முழுவதும் இருக்கும் தமிழர்கள் அவர் பின்னால் நிற்போம். இந்தியாவைப் பொறுத்தவரை நான் சொல்ல விரும்புவது, ஈழத்தமிழர் பிரச்சினையும் இலங்கையில் சீனா காலூன்றுவதன் மூலம் இந்தியா எதிர்நோக்கும் அபாயமும் வேறு வேறு அல்ல. ஒன்றுடன் ஒன்று பின்னிப் பிணைந்தவை. ஒன்றின் தீர்வில் தான் இன்னொன்றுக்கான தீர்வு இருக்கிறது. தென்னிந்தியாவில் மட்டும் 700 இற்கும் மேற்பட்ட இராணுவத் தொழிற்சாலைகளும் தளங்களும் இருக்கின்றன. சீனா திபெத்திலிருந்து தாக்குவதை விட மன்னாரிலிருந்து தாக்குவது எளிதாகும்.

இந்துமாக்கடலின் ஆதிக்கம் சீனாவின் கைக்குப் போய்விட்டால் இந்தியா மட்டுமல்ல, மேற்கு நாடுகளும் பல்வேறு சிக்கல்க்ளுக்கு உள்ளாகும். எனவே இந்தப் பிரச்சினையில் இந்தியா நன்கு சிந்தித்து ஈழத்தமிழர்களின் ஒத்துழைப்போடு சீன அபாயத்தை முறியடிக்க முன்வரவேண்டும்."

**“இறுதியாக ஒரு கேள்வி... நீங்கள் சொன்னபடி, பிரபாகரன் எப்போது வருவார், எப்படி வருவார்?”**

“அதை அவர்தான் தீர் மானிப்பார். அவருக்குத்தான் அது தெரியும்!"

ஜூனியர் விகடன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வழிகாட்டி

என்னைத் திமிறிடும்
எண்ணங்களைத்
துவைத்து - உள்ளம்
தூய்மையாய்
வெளிக்காட்ட
பிரயத்தனப்படுகிறேன்..

இடைஞ்சல்கள் அகற்றி
இடைவெளியின்றி
இயக்குவதற்கு
இயந்திரக் கதியில்
இளைப்பாறலன்றி
இயங்குகிறேன்

ஏறும் போதெல்லாம்
எட்டி உதைத்து
எள்ளி நகைக்கின்றது
காலம் - என்னை
இருளைத் துளைக்கும்
தீக்குச்சியென
ஒளிர்ந்து
வழிகாட்டுகிறது
நம்பிக்கை...
எப்பொழுதும்



தமிழ்விழி சுஜீவனி,
ஈரோடு, தமிழ்நாடு.

## அந்தக்காலம் மீளுமா...

அம்மியும் குளவியும் ஆட்டம் நிறுத்தின
ஆட்டுக் கல்லுக்கும் அதேகதி ஆயின
மம்மியின் கை இப்போ மடக்க நீட்ட
முடியாத முடக்குவாத அடங்காப் பிடாரியாம்

குசினிக்குள் களிமண் அடுப்பு சமையலில்
குந்தியிருந்து குணமாய் நடந்தே ஏகின
குனிந்து எழுந்து ஊதுகுழலால் மூச்சு
குறைபடா நலன் பெற அடுப்பும் எரிந்தது

அடுப்பு இப்போ இடுப்பின் வரை உயர்ந்ததால்
இடுப்பின் அளவும் அடுப்பின் பருமனாயிற்று
எடுக்கும் குழந்தைக்கு மம்மிக்கு இடுப்பே இல்லை
வழுக்கி விழவே வண்டில் வாடிக்கையானது

குடும்ப வாழ்வு குறுகிப் போனது கூட்டுக் குடும்பம்
வீடுபட்டுப் போயிற்று பிடிப்பில்லாமலே குழந்தைப் பேறு
கடுகுக் குடும்பமாய் நகர்ந்து ஒன்று இரண்டாயிற்று
இயற்கைப் பிரசவம் இழிவாய்ப் போயிற்று இப்போ

எடுத்ததும் அறுவை 'சீசர்' என்றாயிற்று அழகுமானது
இடுப்பு என்பு விரியா நிலையில் இயற்கைப் பேறு எங்ஙனம்
தடுப்பு வைத்தனர் குடும்பக் கட்டுப்பாடென மட்டுமா அது
தாயின் கருவறை தாங்கும் தகைமையும் போயிற்று

கால் நடக்க கட்டுப்பாடாகிக் கழிந்த முடக்கத்தால்
கால் மைல் தூரமும் 'சூட்டியில்' தாவுவர் கடுகதியாக
வேல் பாயும் விரைவிலும் வீரியம் காட்டுவர் விபரீதம்
நூல் அறுபட்டமாய் நொய்ந்து பாயில் கிடப்பரே





வை.க.தவமணிதாசன் நல்லூர்.

## பாத்திரக் கூற்று(க்கள்)



மனித வாழ்க்கை பயணிக்கும் பாதை
விசித்திரம் மிக்கது
தேடலோடு ஆரம்பித்து
தேவையற்று முடிக்கப்படுகிறது...

மேடை எனும் பாரினில்
நம்மோடு பயணிக்கும்
ஒவ்வொருவரும் பல்வேறுபட்ட
பாத்திரக்கூற்றே...

பெற்றவர்கள் ஒருவிதம்
உடன்பிறந்தோர் ஒருவிதம்
கரம் பிடித்தவர் ஒரு விதம்
தோழமையோடு பழகுபவர் ஒருவிதம்
தோழமையில் தனியாகப் பிரித்து
சிறப்பு கூறப்படுபவர் ஒரு விதம்...

இவற்றை விளக்க கூறுவதாயின்
அப்பா அம்மா அண்ணா தம்பி
அக்கா தங்கை காதலன் காதலி
நண்பன் நண்பி உறவினர் பகையாளி
இவர்கள் யாவரும் தான் நம்மை சூழ வாழும்
பாத்திரக் கூற்றுக்கள்

இவற்றை கூறும் நானும்
பல்வேறுபட்ட
பாத்திரக் கூற்றே...

புஸ்பாகரன் பிரமிலா.

## மௌனத்தின் தேடல்- 598



## அழுகுரல்

அழுது புலம்புவது தான் ஏனோ
ஆண்டவனிடம் வேண்டுகின்றேன்
இன்னும் சோகம் வேண்டாம் என
ஈவு இரக்கமற்ற இயற்கையின் சீற்றம்
உயிர்கள் அற்ற மனித பிணக் குவியல்
ஊர்கள் எல்லாம் உருக்குலைத்து போனதனால்
எதுவும் அற்று நடுவீதியில் அநாதையாய்
ஏதிலியான மக்கள்வாழ்வு

கும்பவாழியான், உடுப்பிட்டி.

## மௌனத்தின் தேடல்- 599



அன்பு வாசகர்களே உங்கள் மனதில் தோன்றும் கவிதை, வியாசர் பதில்களை
ஆசிரியர் மௌனத்தின் தேடல்
வலம்புரி- சங்குநாதம்
இல.03,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
எனும் முகவரிக்கு அனுப்பி வையுங்கள்

## மனம் மகிழ்வான்

கண்கள் இரண்டும் விற்று
சித்திரம் வாங்குவதா?
கைகள் இரண்டும் அற்று
காணிக்கை வாங்குவதா?
பாப்பா! நீ இவனை
மோதி மிதித்து விடு
முகத்தில் உமிழ்ந்து விடு
பாரதி மனம் மகிழ்வான்

பி.யதுர்சனி,
கொக்குவில்
இந்துக் கல்லூரி.

## பிள்ளை மனம் அறிவாரோ

ஒரு கையில் துப்பாக்கியுளர்
தரும் இனிப்பை வாங்குவதற்கே
கரமிரண்டும் இலாமைக்கு
கடும் யுத்தம் காரணமோ
பெரு மனமாய் கொடுப்பவரா
பிள்ளை மனம் அறிவாரோ
இரக்கமிலா நெஞ்சினர்க்கு
இதுவெல்லாம் வேடிக்கை

வைகதன்,
கொக்குவில்.

## மனிதப் பேய்கள்

கையறு நிலையாய்
கைகளற்று திற்கும்
பாலகப் பருவம் பண்ணிய
குற்றம் தான் என்ன?
அங்கக் குறைவிருந்தென்ன
பிஞ்சுகளைக் கூட
குதறிக் கொள்வதற்கு
மனிதப் பேய்கள் வாழ்வதும்
இந்த உலகத்தின்
சாபக்கேடு தான்.

சி.இ.அன்புதுரை, சம்மட்டிஒலை, மானிப்பாய்.

## உனக்குத் தெரியும்

நீ சின்னப் பிள்ளை அல்ல
களம் பல கண்ட தமிழிச்சி
பாதகன் தருவது தீன் பொதியல்ல
வெடிபொருள் என்பது
முதலே உனக்குத் தெரியும்
வெடித்த பின்பே தான்
எனக்குப் புரியும்.

பி. மதுஷ்சன்,
தையிட்டி.

## கனிவு!

இரு கைகளையும் இழந்த
சிறுமிக்கு தன் கையால் உணவூட்டும்
இராணுவ வீரனே
உன் மனதில்உள்ள இரக்கம்
பாசத்தைக் கண்டு
அந்த
இறைவன் மகிழ்ந்திருப்பான்.

சுப்பிரமணியம் ஜெயரூபன்,
பருத்தித்துறை.

## இரு மனதுகள்

கரம் நீட்டி உணவளிக்கும் மனமே
உன் கரை விழிப் பார்வையில் - எனை அறியாயோ!
கரமிழந்து நான் நிற்க காரணம் யாரென்று
மனமிரங்கி அறிந்தாயோ!
நான் அறிவேன் உன் விழிப்பார்வையில்
உன் மனைவி, பிள்ளையின் ஏக்கங்கள்

தி. டிலக்ஸன், உடுப்பிட்டி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# கடல் புறா

## புதிய பொறுப்பு

காலத்தின் பதிவு 52

அமீரின் வன்சொற்கள் வெற்றுச் சொற்களல்ல என்பதை அவர்கள் அனைவரும் உணர்ந்து கொண்டிருப்பதையும், அத்தனை பேரும் அப்பொழுது நிகழ்ந்த கொலையைவிட அடுத்து நிகழ இருக்கும் விளைவுகளைப்பற்றியே கவலையுடனிருப்பதையும் புரிந்துகொண்டு தனது நடைமுறையை நிர்ணயித்துக் கெண்டான்.

அனைவரையும் அமைதியுடனிருக்கும்படி கையமர்த்திய இளையபல்லவன் வில்வலனை ஏறெடுத்துச் சில விநாடிகள் நோக்கிவிட்டுக் கேட்டான். இந்த விபரீதத்தை இத்துடன் நிறுத்தலாமா மேற்கொண்டு இதன் விளைவுகள் தொடர வேண்டுமா?" என்று.

வில்வலன் முகம் கோபத்தால் கொதித்ததா பயத்தால் வியர்த்ததா, துன்பத்தால் துக்கித்ததா என்று சொல்ல முடியாதபடி பலவித மாறுபாடுகளை அடைந்து கொண்டிருந்தது சற்று தூரத்தே இறந்து கிடந்த தன் சக தலைவனையும் பார்த்துப் பலவர்மனையும் பார்த்தான் அவன் ஒரு விநாடி அமீர் எச்சரிக்கை செய்து முடித்ததுமே தன் உணர்ச்சிகளை ஒரு கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்து அர்த்தபுஷ்டியுடன் தன் காவல் வீரர்களையும் பார்த்துவிட்ட அக்ஷயமுனைக் கோட்டைத் தலைவன் முகத்திலிருந்து அவனது மனப்போக்கை எந்தவிதத்திலும் புரிந்துகொள்ள முடியாத வில்வலன் தனது மற்ற இரு சகாக்களையும் நோக்கினான், அவர்கள் முகத்தில் கோபத்திற்குப் பதில் அச்சமே நிலவிக் கிடந்ததைக் கண்டதும் மிகுந்த வெறுப்புடன் மறுபடியும் இளைய பல்லவனை ஏறிட்டு நோக்கினான். அந்த வெறுப்பு பூரணமாக மண்டிய குரலில், "எனது நண்பர்களில் ஒருவன் இறந்து கிடக்கிறான் என்று கூறவும் செய்தான்.

"வருந்துகிறேன். ஆனால் குற்றம் என்னுடையதல்ல." திட்டமாக வந்தது இளையபல்லவன் பதில்.

"குறுவாளெறிந்தவன் உனது உப தலைவன்," என்று எரிச்சலுடன் சுட்டிக் காட்டினான் வில்வலன்.

"தலைவனின் கொலையை விரும்பாத உப தலைவன் அவன்," என்று பதிலிறுத்தான் இளைய பல்லவன். இறந்த எனது நண்பனுக்குச் சுற்றம் அதிகம். அவர்களுக்கு என்ன பதிலை நான் சொல்வது !"

"செய்த குற்றத்தை எடுத்துச் சொல்."

"கொலை முயற்சியைக் குற்றமென்று எங்கள் குலத்தார் ஒப்புக்கொள்ளமாட்டார்கள்"

"ஏன்?"

"கொலை எங்களுக்கு எங்களுக்கு சர்வ சகஜம். அது எங்களுக்குப் பழக்கம்"

"அந்தப் பழக்கத்தையும் இங்கு வருடா வருடம் ஏற்படும் குழப்பத்தையும் தடுக்க அகூதாவின் உபதலைவன் வந்திருக்கிறானென்று உன் குலத்தாருக்குச் சொல்."

"சொல்கிறேன். ஆனால் அதன் விளைவு-" விளைவு என்ன?"

"பலவர்மனுக்குத் தெரியும்" என்று கூறிய வில்வலன், இளையபல்லவனை நோக்கி முதுகைத் திருப்பிக் கொண்டு தூர விழுந்து கிடந்த தனது கத்தியைக் கூடத் திரும்பிப் பெற முயலாமல் விடுவிடுவென தனது சகாக்களை நோக்கி நடந்தான். தனது வீரர்களில் இருவருக்குக் கண்ணால் சமிக்ஞை செய்து இறந்தவன் சடலத்தைத் தூக்கி வரச் செய்து அந்தக் கூட்டத்தை விட்டு வெளியேறினான். அவன் சகாக்கள் இருவரும் துணைவீரர் ஜம்பதின் மருதங் கூட அவனைத் தொடர்ந்து சென்றார்கள். அவர்கள் கண்ணுக்கு மறையும் வரையில் அவர்களையே பார்த்துக் கொண்டிருந்த கூட்டம் அவர்கள் உருவங்கள் மெள்ள மறைந்ததும் இளையபல்லவனை நோக்கின. இளையபல்லவன் ஏதோ பெரும் சங்கடம் நீங்கியதற்கு அறிகுறியாக சாத்திப் பெருமூச்சு விட்டு பலவர்மனை நோக்கினான்.

(தொடரும்)



## அதிசயங்களை விஞ்சிய பேரதிசயங்கள்

ஏ.டி. என்று அழைக்கப்படும் அலெக்சியா டெலங்லெக்டசியா என்கிற அந்த நோய் கொஞ்சம் கொஞ்சமாக நோய் எதிர்ப்பு சக்தியை இழக்கச் செய்யும்.

இன்று வரை மருந்து கண்டு பிடிக்கப்படாத இந்த நோய், குழந்தைப் பருவத்திலேயே ஆட்கொண்டுவிடும். உடலில் உள்ள செல் அமைப்புகளின் ஒழுங்கற்ற தன்மை சில குழந்தைகளுக்கு மட்டும் பிறவியிலேயே அமைந்து விடும். இதன் காரணமாக இதயம், நுரையீரல் ஆகிய பகுதிகள் பாதிப்படையுமாம்.

இதனால் மெல்ல மெல்ல உடல் உறுப்புக்கள் செயலிழக்கத் தொடங்கிவிடும். 10 வயதில் சக்கர நாற்காலி மூலமே நகர முடியும். அதன் பிறகு அதுவும் சாத்தியமில்லாமல் படுத்த படுகை ஆகிவிடுவார்.

மிக அபூர்வமான 10 இலட்சம் குழந்தைகளுக்கு ஒரு குழந்தை என்ற அளவில் இந்த நோய் பீடிக்குமாம். இப்படியான நோய் பிரிட்டனை பொறுத்த வரை 60 குழந்தைகளுக்கு உள்ளதாம். அதில் ஒரு குழந்தை தான் லோலா ப்ளூமர்.

லோலாவுக்கு எப்படியாவது புதிய உலக அதிசயங்கள் என்று பட்டியிலிடப்பட்ட இடங்கள் அனைத்தையும் நேரில் சென்று பார்க்க ஆசையாம். அதற்காக அவளது தாய் ஜோ ப்ளூமர் தனது சம்பாத்தியம் அனைத்தையும் சேர்த்து செலவிட்டாவது அவளது ஆசையை நிறைவேற்ற வேண்டும் என உறுதி கொண்டார்.

ஆனால் அவரது கையிருப்பை கணக்கிட்டபோது அவ்வளவு தொகை தேறாது என்று தெரிந்து விட்டது. எனவே மகளின் ஆசையை நிறைவேற்ற நிதி திரட்டத் தொடங்கினார். இங்கிலாந்தின் சில சமூக நிறுவனங்கள் அவருக்கு துணைநிற்கின்றன. இசை நிகழ்ச்சிகள், விளையாட்டுப் போட்டிகள் போன்ற பல்வேறு வழிகள் மூலம் நிதி திரட்டப்பட்டு வருகின்றது. லோலாவுக்கும் மூத்ததாக 12 வயது மகன் ஒருவர் உண்டு.

என்றாலும் மகளின் ஆசையை மட்டும் கருத்தில் கொண்டு எஞ்சிய தங்களின் வாழ்க்கைக்கென எதுவும் சேர்த்து வைக்காமல் ஜோ ப்ளூமர் தங்கள் அனைத்து தேவைகளையும் கட்டுப்படுத்திக் கொண்டு தொகையைச் சேர்த்து வருகிறார். மேற்கத்தேய உலகம் நாகரீகத்தின் போதையில் மிதமிஞ்சித் திளைப்பது என்பது எல்லோருக்கும் தெரியும். பணமும் சுகபோங்களுமே பிரதானம், [illegible] பெயரளவே [illegible] உலகமெங்கும் நிரம்பித் தளும்புகிறது. ஆனாலும் தாயன்பு என்பது இன்னமும் நீர்த்துப் போகாத நிஜம் என்பதை உலகெங்கும் உள்ள தாய்மார்கள் ஒவ்வொரு காலகட்டத்திலும் நிரூபித்தபடியே இருக்கிறார்கள்.

அந்தக் கூற்றின் மற்றொரு வடிவமே ஜோ ப்ளூமர். பண்பாட்டிலும் அன்பு பிணைப்பிலும் இன்னமும் தன்னை இழக்காத பாரதத்தின் தனித்தன்மையில் ஊறித் திளைக்கும் நமக்கு இது போன்ற விடயங்கள் அவ்வளவு ஆச்சரியத்திற்குரியதல்ல தான்.

என்றாலும் மேற்கத்தேய உலகிலும் உறவு என்பதும் அன்பு என்பதும் மனிதப் படைப்பின் மகத்தான அதிசயம் என்பதை [illegible]மே நிரூபித்துக் கொண்டிருக்கிறாள். அந்தப் பேரதிசயத்தை விஞ்சிய அதிசயத்தை நம்மால் ஒருபோதும் படைத்து விட முடியாது.

பயணங்கள் என்பவை வெறும் கேளிக்கையான ஊர்ச் சுற்றல் மட்டுமில்லை... அதற்கெல்லாம் அப்பாற்பட்டு மனித குலத்தின் மகத்தான பண்பாட்டுக் கூறுகளை, அடிப்படையான அன்பின் வலிமையை அடையாளப்படுத்துவதும் கூட.

பயணங்கள் முடிவற்றவை. இந்த பௌதீக உடல் ஆரோக்கியமாக இயங்குகின்றவரை பயணித்துக் கொண்டே இருப்போம். ஆத்ம சுத்தி எனப்படும் உள்முகப் பயணத்தை இணைக்கும் போது எல்லாப் பயணங்களும் அர்த்தமுள்ளதாக ஆகின்றன. நம் மனமும் உடலும் இணைந்து பயணிக்கும் போது நம் கண்ணுக்குப் புலப்படாத பேரதிசயங்கள் நம் கவனத்துக்கு வரும்... அவற்றை நோக்கிப் பயணிப்போம்...

(முற்றும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'நித்திலம் தொகுத்து வழங்கும்'
சுகமான விடியல் 331
வலம்புரியின் மருத்துவச்சுடர்

# எந்த எண்ணெய் பாதுகாப்பானது?

சமையலுக்குபாவிக்கப்படும்எண்ணெய் வகைகளில் எது பாதுகாப்பானது என்பது சம்பந்தமான புரிதலில் ஒரு பெரும் குழப்பநிலை காணப்படுகிறது.


நல்லெண்ணெய் நல்ல எண்ணெயா தேங்காய் எண்ணெயை பாவிக்கலாமா? ஒருமுறை பொரித்த எண்ணெயைவெளியே ஊற்றுவதா? இது கட்டுப்படியாகுமா? உடல் நிறையை குறைப்பதற்கு எந்த எண்ணெய் பொருத்தமானது. மீன் எண்ணெய் குளிசைகளை பாவிப்பது பயன்தருமா? தாவரக்கொழுப்பு, விலங்கு கொழுப்பு என்பவற்றின் வேறுபாடுகள் என்ன? என்பது சம்பந்தமான ஒரு தெளிவு பயனுடையதாக அமையும்.

பொதுவாக எல்லா வகையான எண்ணெய்களையும் அளவுடன் பாவிப்பது பாதுகாப்பானது. எண்ணெய் சேர்த்து வதக்கி எடுக்கும் சமையலுக்கு நல்லெண்ணெய், ஒலிவ் எண்ணெய், சூரியகாந்தி எண்ணெய் என்பன சிறந்தவை.

ஆனால் வடை, றோல்ஸ், பற்றீஸ் போன்ற பொரித்தெடுக்கும் உணவுகளை தயாரிப்பதற்கு இந்த எண்ணெய் வகைகள் சிறந்தவை அல்ல. இந்த எண்ணெய் வகைகளை கொதிக்க வைக்கும் பொழுது அவை 'ராண்ஸ்' கொழுப்பாக மாற்றமடைகின்றன. இந்த 'ராண்ஸ்' கொழுப்பு உடல் நலத்துக்கு பாதுகாப்பானது அல்ல.

பொரித்து எடுக்கும் இந்த உணவு வகைகளைதயாரிப்பதற்குதேங்காய் எண்ணெய் சிறந்தது. தேங்காய் எண்ணெயை கொதிக்கவைக்கும் பொழு தும் அது 'ராண்ஸ்' கொழுப்பாக மாற்றமடையாது. இதனால் பொரித்த தேங்காய் எண்ணெயை 2ஆம் 3ஆம் முறை பொரிப்பதற்கு பாவிப்பதும் பெரிய பாதிப்பு எதனையும் ஏற்படுத்த மாட்டாது.

இதனால் ஒரு தடவை பொரித்த தேங்காய் எண்ணெயை வெளியே ஊற்றவேண்டிய அவசியமும் இல்லை. ஆனால் நல்லெண்ணெய், ஒலிவ் எண்ணெய், சூரியகாந்தி எண்ணெய் போன்றவற்றை பொரிப்பதற்கு மீண்டும் மீண்டும் பாவிப்பது பாதுகாப்பானது அல்ல. அனைத்து எண்ணெய் வகைகளுக்கும் உடல்நிறையை அதிகரிக்கும் தன்மை காணப்படுகிறது.




எனவே உடல்நிறையை குறைக்க விரும்வோர் அனைத்து வகையான எண்ணெய்களையும் குறைத்துக் கொள்வது நல்லது.

பொதுவாக விலங்கு கொழுப்புடன் ஒப்பிடும்பொழுது தாவரக்கொழுப்புகள் பாதுகாப்பானவை என ஆராய்ச்சிகள் உறுதி செய்கின்றன.

உடல்நலத்தை மேம்படுத்துவதற்கு மீன்எண்ணெய் குளிசை வகைகளோ அல்லது ஒமேகா-3 வகை குளிசைகளோ பெரிய அளவில் உதவப் போவதில்லை என்றும் ஆராய்ச்சிகள் தெளிவு படுத்தி நிற்கின்றன.

எனவே அதிகவிலை கொடுத்து இந்த வகையான குளிசைகளை வாங்கி பயன்படுத்துவது பயனற்றது .

இறக்குமதியாகி அதிக விலையில் விற்பனையாகும் மரக்கறி எண் ணெய் வகைகளிலும் பார்க்க எமது பகுதியில் உற்பத்தியாகும்தேங்காய் எண்ணெய் பாதுகாப்பானது.

உலகளாவிய அளவில் பயிரிடப்படும் சூரியகாந்தி செடிகளிலிருந்து இவ்வளவு பெருந்தொகையான சூரியகாந்தி எண்ணெயை உற்பத்தி செய்வது நடைமுறைச் சாத்தியமானது அல்ல.

உலகளாவிய அளவிலே பயிரிடப்படும் சூரியகாந்தி பயிர்களை கருத்தில்கொண்டால் அவற்றிலிருந்து பெறப்படக்கூடிய எண்ணெய் தற்பொழுது சூரியகாந்தி எண்ணெய் என்று சொல்லி விற்பனையாகும் எண்ணெயின் காற்பங்கு எண்ணெயை கூட உற்பத்தி செய்வது நடைமுறைச் சாத்தியமானது அல்ல.

எனவே இங்கு விற்பனையாகும் சூரியகாந்தி எண்ணெய் வகைகளின் தூய்மைத் தன்மை நிச்சயமற்றதாக காணப்படுகிறது. எண்ணெயை ஊற்றி வதக்கி எடுத்து பிரட்டும் உணவு வகைகளிலே பொரித்து வடித்து எடுக்கும் உணவு வகைகளிலும் பார்க்க எண்ணெய்செறிவு அதிகமாக காணப்படுகிறது.

குறைந்தளவு எண்ணெயை பாவித்து சுவையான உணவு வகைகளை தயாரிக்கும் முறைகளை அறிந்திருப்பது பயனுடையதாக அமையும்.

**Dr.சி.சிவன்சுதன்**
**பொது வைத்திய நிபுணர்**

# ஒட்சிசனை உருவாக்கிக் கொண்டிருக்கும் தொழிற்சாலை

பசுமையான மரங்கள் ஒவ்வொன்றும் நித்தமும் பல்லாயிரக்கணக்கான லீற்றர் ஈரலிப்பான ஒட்சிசனை உருவாக்கிக் கொண்டிருக்கும் தொழிற்சாலைகளாக விளங்குகின்றன.

அத்துடன் நாம் வெளி விடும் அசுத்தக் காற்றை உள்ளெடுத்து சுத்திகரிக்கும் வடிகட்டிகளாகவும் தொழிற்படுகின்றன. சுற்றாடலின் வெப்பநிலையைக் குறைத்து சூழல் வெப்பநிலையை மனிதன் சுகமாக வாழக்கூடிய ஒரு வெப்பநிலையில் சீர் செய்து வைக்கும் ஒரு வெப்பநிலை சீராக்கியாகவும் இந்த மரங்கள் தொழிற்பட்டுக் கொண்டிருக்கின்றன.

தாவரங்களில் துளிர்த்து வரும் குருத்துக்களும், பசுமையும், குளிர்ச்சியும், நிழலும் அதன் மலர்களும் மனித மனங்களுக்கு புத்துணர்ச்சியையும் அமைதியையும் அள்ளி வழங்குகின்றன. மாதம் மும்மாரி பொழியாவிட்டாலும் போதுமான அளவு மழை வீழ்ச்சிகிடைப்பதற்கும் எமது தண்ணீர்த் தேவையை நிவர்த்திப்பதற்கும் மரங்கள் இன்றியமையாதவை என்பதும் மரம் இன்றி மழை இல்லை என்பதும் எமக்குத் தெரியும். எமக்கு உணவுப் பொருட்களையும் வருவாயையும் தரும் தாவரங்கள் தான் பயனுள்ள தாவரங்கள் என்று எண்ணிக்கொள்கிறோம்.

அனைத்து தாவரங்களுமே பயனுள்ள அட்சயபாத்திரங்கள் என்பதை மறந்து விடுகின்றோம். நாம் வெட்டி வீழ்த்திய ஒவ்வொரு மரங்களுக்காகவும் வேதனைப்படுவோம். அதற்கு பிராயச்சித்தமாக வீழ்த்திய ஒவ்வொரு மரங்களுக்கு பதிலாகவும் 9 மரங்கள்நட்டு வளர்ப்போம்.

**Dr.சி.சிவன்சுதன்**
**பொது வைத்திய நிபுணர்**

**பலருக்கு பயன்படக்கூடிய ஆரோக்கியம் சம்பந்தமான அல்லது உளவியல் சமூக மேம்பாடு சம்பந்தமான உங்கள் சந்தேகங்களை ([illegible]th@gmail.com) என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பி வைக்கவும். அதற்கான எமது பதில்கள் இங்கு பிரசுரிக்கப்படும்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்டியில் கோர விபத்து 28 பேர் படுகாயம்

(கண்டி)

கண்டி - நெல்லிகல பகுதியில் இடம்பெற்ற பேருந்து விபத்தில் காயமடைந்த 28 பேர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

மொரட்டுவை பகுதியில் இருந்து நெல்லிகல விகாரைக்கு 47 பேரை ஏற்றிச் சென்ற பேருந்தே விபத்துக்குள்ளானதாக பொலிஸார் குறிப்பிடுகின்றனர்.

காயமடைந்தவர்கள் பேராதனை மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

விபத்து குறித்த மேலதிக விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்துள்ளனர். (ந)

# நூல் வெளியீடு

(யாழ்ப்பாணம்)

இராசையா ஸ்ரீதரன் எழுதிய சிறுவர் கதைக்கொத்து எனும் குழந்தைகளுக்கான அறிவுரைக் கதைகள் அடங்கிய பாலர் தமிழ் நூல் இன்று முற்பகல் 11.30 மணிக்கு யாழ்.வண்ணை கன்னாதிட்டி காளி அம்பாள் கோயில் மண்டபத்தில் வெளியிட்டு வைக்கப்பட வுள்ளது.

அனைவரையும் கலந்து கொள்ளும்படி ஏற்பாட்டாளர்கள் அழைப்பு விடுத்துள்ளனர். (ந)

# போராட்டத்தில் குதிக்கும் மின்சார சபையின் தொழிற்சங்கங்கள்

(கொழும்பு)

**அரசாங்கத்தின் தற்போதைய வரிக்கொள்கை, மேலதிக கொடுப்பனவை குறைத்தல் உள்ளிட்ட சில விடயங்களுக்கு எதிர்ப்பு தெரிவித்து இலங்கை மின்சார சபையின் சில தொழிற்சங்கங்கள நாளை திங்கட்கிழமை சுகயீன விடுமுறையை அறிக்கையிட்டு தொழிற்சங்க போராட்டத்தில் ஈடுபடத் தீர்மானித்துள்ளன.**

சுமார் 12 இற்கும் அதிகமான தொழிற்சங்கங்கள், இந்தத் தீர்மானத்தை மேற்கொண்டுள்ளதாக, இலங்கை மின்சார சபை பொறியியலாளர் மற்றும் சட்டத்துறை சங்கத்தின் இணைப்பாளர் நந்தன உதயகுமார தெரிவித்திருந்தார்.

நாடளாவிய ரீதியாக தமது தொழிற்சங்க பிரதிநிதிகள், நாளை 27 ஆம் திகதி சுகயீன விடுமுறையை அறிக்கையிட்டு, கொழும்புக்கு வந்து, இலங்கை மின்சார சபையின் பிரதான காரியாலயம் முன்பாக போராட்டத்தில் ஈடுபட உள்ளதாக அவர் மேலும் தெரிவித்திருந்தார். (ந)

# மக்கள் விடுதலை முன்னணி ஒரு கொடிய கட்சி

## திஹாகொட பத்தியதேரர் சாடல்



(கொழும்பு)

பிரபாகரனுக்குப் பின்னர் நாட்டிற்கு மிகப்பெரிய அழிவை மக்கள் விடுதலை முன்னணி செய்துள்ளதாக மேல் மாகாண அதிகார சங்கநாயக்க திஹா கொட பத்திய தேரர் தெரிவித்துள்ளார்.

கடந்த காலங்களில் ஜே.வி.பி நாட்டிற்கு செய்த அழிவுகளை மக்கள் மறக்கவில்லை என்றும் மக்கள் விடுதலை முன்னணி என்ற பெயரில் தோன்றினாலும் இன்னமும் அதே கொடிய கட்சி தான் என்றும் தேரர் குறிப்பி ட்டுள்ளார்.

மக்கள் விடுதலை முன்னணியின் பௌத்த விவகாரங்களின் தலைவராக நியமிக்கப்பட்ட தனவர்தன குருகேவுடன் அஸ்கிரிய மற்றும் மல்வத்தை பீடங்களின் மகாநாயக்க தேரர்களை சந்தித்து ஆசி பெற்றதன் பின்னர் ஊட கவியலாளர்கள் முன்னிலையில் கருத்துத் தெரிவிக்கும் போதே தேரர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

கடந்த காலத்தை அறியாத இளைஞர்கள் மக்கள் விடுதலை முன்னணியை சுற்றித் திரண்டு வருகின்றனர் .தலதா மாளிகை மீதான தாக்குதல், பிக்குகள் படுகொலை, அரச சொத்துக்கள் அழிக்கப்பட்டமை போன்ற பல அழிவுச் செயல் களுக்கு ஜே.வி.பி பொறுப் பேற்றது என்பது அனைவரும் அறிந்த உண்மை.

மேலும், அவர்கள் செய்த குற்றங்களை ஏற்றுக் கொள்ளாத ஒரு குழுவிடம் நாட்டின் ஆட்சி சென்றால், ஏற்படும் சூழ்நிலையை எவரும் கற்பனை செய்து பார்க்க முடியும் என்றும் தேரர் தெரிவித்துள்ளார். (ந)

# உலகப் பொருளாதாரத்தை நிர்வகிப்பது மிகவும் முக்கியமானது - இந்திய நிதியமைச்சர்



(டில்லி)

கொவிட் தொற்றுநோய் மற்றும் ரஷ்யா - உக்ரைன் போரினால் ஏற்பட்ட கடுமையான பொருளாதார மந்தநிலை காரணமாக இந்தியாவின் அண்டை நாடுகளான இலங்கை, பங்களாதேஷ் மற்றும் பாகிஸ்தான் ஆகிய நாடுகள் கடந்த ஆண்டு சர்வதேச நாணய நிதியத்திடம் பிணையெடுப்பு கோரியுள்ளன.

இந்த நிலையில் உலகளாவிய கடன் பாதிப்புகளை நிர்வகிப்பது உலகப் பொருளாதாரத்திற்கு முக்கியமானது என இந்திய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் தெரிவித்துள்ளார்.

பல நாடுகளில் அதிகரித்து வரும் கடன் பாதிப்புகளை சுட்டிக்காட்டியுள்ள இந்திய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன், ஜி-20 நாடுகளின் பலதரப்பு ஒருங்கிணைப்புக்கு அழைப்பு விடுத்துள்ளார்.

ஜி-20 நிதியமைச்சர்கள் மற்றும் மத்திய வங்கி ஆளுநர்கள் ஆகியோர் நேற்று முன்தினம் பெங்களூரில் நடத்திய கூட்டத்தின் ஆரம்ப நிகழ்வில் கலந்து கொண்டு இந்த அழைப்பை விடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ந)

# சீனாவால் இலங்கைக்கு ஆபத்து எச்சரிக்கை விடுக்கும் அமெரிக்கா

(வோஷிங்டன்)

சீனாவினால் இலங்கைக்கு ஏற்படக்கூடிய ஆபத்து குறித்து அமெரிக்கா எச்சரிக்கை விடுத்துள்ளது.

வழங்கிய கடனைப் பயன்படுத்தி இலங்கை மற்றும் பாகிஸ்தானிற்கு சீனா அழுத்தங்களை பிரயோகிக்கும் சாத்தியங்கள் காணப்படுவதாக அமெரிக்கா அச்சம் வெளியிட்டுள்ளது.

தென் மற்றும் மத்திய ஆசிய விவகாரங்களுக்கான அமெரிக்க துணைச் செயலாளர் டொனால்ட் லூ இந்த எச்சரிக்கையை வெளியிட்டுள்ளார்.

இந்தியாவிற்கு மிக அருகில் காணப்படும் நாடுகளுக்கு சீனா கடனுதவிகளை வழங்கி அவற்றை தனது கட்டுப்பாட்டில் வைத்துக் கொள்ளக் கூடிய அபாயம் காணப்படுவதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

புறச்சக்திகளின் அழுத்தங்களுக்கு அடி பணியாது தாங்களாகவே பிராந்திய வலய நாடுகள் தீர்மானம் எடுப்பதன்ன உறுதி செய்ய வேண்டுமெனவும் அதற்கான உதவிகள் வழங்கப்படும் எனவும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

இதேவேளை, அண்மையில் கடன் மறுசீரமைப்பு விவகாரத்தில் சீனா தனியான நிபந்தனைகளை விதிப்பதாக அறிவித்துள்ளதாகவும் பொது இணக்கப்பாட்டை எட்ட விரும்பவில்லை எனவும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அண்மையில் சுட்டிக் காட்டியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ந)

# உடனடியாக தலையிடுங்கள்

## சபாநாயகருக்கு அவசர கடிதம்

(கொழும்பு)

உள்ளூராட்சி மன்றத் தேர்தலை நடத்துவதற்குத் தேவையான நிதியைப் பெற்றுக் கொள்வதற்கு தலையிடுமாறு சபாநாயகருக்கு கடிதம் அனுப்பியதாக தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் சட்டத்தரணி நிமல் ஜி.புஞ்சி ஹேவா தெரிவித்திருந்தார்.

நேற்று முன்தினம் நடைபெற்ற தேர்தல்கள் ஆணைக்குழு கூட்டத்தில் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

அதன்படி இந்தக் கடிதம் சபாநாயகருக்கு அனுப்பி வைக்கப்பட்டதாக அவர் மேலும் குறிப்பிட்டார். (ந)

# 53 வீதமான கொடுப்பனவுகள் கடந்த மாதங்களில் செலுத்தப்பட்டுள்ளது

## அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய

(கொழும்பு)

அரசாங்கத்தினால் செலுத்தப்பட வேண்டிய கொடுப்பனவுகளில் 53% கடந்த சில மாதங்களில் செலுத்தப்பட்டுள்ளதாக இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்துள்ளார்.

அதற்காக 191 பில்லியன் ரூபாய் செலவிடப்பட்டுள்ளதாக அமைச்சர் குறிப்பிட்டார்.

எதிர்காலத்தில் புனரமைப்பு மற்றும் மூலதனச் செலவுகளுக்காக கணிசமான தொகையை செலுத்த வேண்டியுள்ளதாக இரா ஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய மேலும் தெரிவித்துள்ளார். (ந)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போரை முடிவுக்குக் கொண்டு வர ரஷ்யா- உக்ரைன் அவசரமாக பேச வேண்டும்

## சீனா வலியுறுத்து

(பீஜிங்)

உக்ரைனிய யுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வருவதற்காக ரஷ்யாவும் உக்ரைனும் அவசரமாக பேச்சுவார்த்தைகளை ஆரம்பிக்க வேண்டும் என சீனா வலியுறுத்தியுள்ளது.

உக்ரைன் மீதான ரஷ்ய படையெடுப்பு ஆரம்பமாகி ஒரு வருடம் பூர்த்தியாகும் நிலையில சீனா இக்கோரிக்கையை விடுத்துள்ளது.

"அரசியல் தீர்வுக்கான" 12 அம்ச திட்டமொன்றை சீன வெளிவிவகார அமைச்சு வெளியிட்டுள்ளது. இப் பேச்சுவார்த்தைகக்காக அனைத்துத் தரப்பினரும் உதவ வேண்டும் என சீனா கோரியுள்ளது.

அணுவாயுதங்களைப் பயன்படுத்துவதை மாத்திரமல்லாமல், அணுவாயுதங்களைப் பயன்படுத்தப் போவதாக அச்சுறுத்தல் விடுப்பதையும் தான் எதிர்ப்பதாக சீனா தெரிவித்துள்ளது.

எனினும், சீனாவின் கருத்தை அமெரிக்கா விமர்சித்துள்ளது. (நி)

# 4 கப்பல் ஏவுகணைகளை ஏவி பரிசோதனை நடத்திய வடகொரியா

(பியாங்யாங்)

இராணுவப் பயிற்சியின் ஒரு பகுதியாக நான்கு மூலோபாய கப்பல் ஏவுகணைகளை ஏவி வடகொரியா சோதனை செய்துள்ளது.

வடகொரிய அணுவாயுத அச்சுறுத்தல்களுக்கு பதிலளிக்கும் வகையில், அமெரிக்காவும் தென்கொரியாவும் கூட்டு இராணுவப் பயிற்சியை மேற்கொள்ளும் நிலையில், வடகொரியாவின் இந்தச் சோதனை அமைந்துள்ளது.

வடகொரியா முதன்முதலில் செப்டெம்பர் 2021 இல் நீண்டதூர கப்பல் ஏவுகணை அமைப்பை சோதித்தமை குறிப்பிடத்தக்கது. (நி)

# போர் தொடங்கி ஓராண்டு நிறைவு புதிய நாணயத்தாள் வெளியிட்ட உக்ரைன்


(கீவ்)

உக்ரைன் நாட்டின் மீது ரஷ்யா நடத்தி வரும் போர் ஓர் ஆண்டை நிறைவு செய்துள்ளது.

போரினால் பாதிப்பு அடைந்துள்ள உக்ரைனுக்கு அமெரிக்கா, ஜப்பான் உள்ளிட்ட பல்வேறு நாடுகள் நிதியுதவி வழங்கி வருகின்றன.

ரஷ்யா,உக்ரைன்இடையே பனிப்போர்நிலவியதன் தொடர்ச்சியாக 2022 பெப்ரவரி 24 ஆம் திகதி உக்ரைன் மீது ரஷ்யா போர் தொடுத்தது. இந்நிலையில், போர் தொடங்கி ஓராண்டு நிறைவையொட்டி உக்ரைன் மத்திய வங்கி நேற்று முன்தினம் புதிய நாணயத்தாள் அச்சிடத்து வெளியிட்டுள்ளது. (நி)

# கியூபாவில் பற்றி எரியும் காட்டுத் தீ கட்டுப்படுத்த முடியாமல் திணறும் வீரர்கள்



(ஹவானா)

கியூபாவில் ஒரு வார காலமாக கட்டுக்கடங்காமல் பற்றி எரிந்து வரும் காட்டுத் தீயை அணைக்க முடியாமல் தீயணைப்பு வீரர்கள் திணறி வருகின்றனர்.

ஹோல்குயின் மாகாணத்திலுள்ள வனப்பகுதியில் கடந்த சனிக்கிழமை பரவிய காட்டுத் தீ சுமார் 2 ஆயிரத்து 200 ஏக்கர் பரப்பளவில் பற்றி எரிந்து வருகிறது.

கியூபா பாதுகாப்புப் படையின் தீயணைப்பு வீரர்கள் விமானங்கள் மற்றும் ஹெலிகொப்டர்கள் மூலம் தீயைக் கட்டுப்படுத்த போராடி வருகின்றனர்.

காட்டுத் தீயால் அப்பகுதி முழுவதும் புகை மூட்டமாகவும் வானம் செந்நிறமாகவும் காட்சியளித்துள்ளது.

வனத் தோட்டங்கள் மற்றும் கோப்பிப் பயிர்களுக்கு பெரும் சேதத்தை ஏற்படுத்தியுள்ளதோடு, வன விலங்குகள் மற்றும் தாவரங்களுக்கும் பெரும் சேதத்தை ஏற்படுத்தியுள்ளது என கியூபாவின் அறிவியல், தொழில்நுட்பம் மற்றும் சுற்றுச்சூழல் அமைச்சகத்தின் நிபுணர் ரெய்னியர் ராமிரெஸ் தெரிவித்துள்ளார்.

கியூபாவில் ஏற்கனவே ஜனவரி மாதத்தில் 80 தடவைகள் காட்டுத் தீ ஏற்பட்டுள்ளதாக உள்ளூர் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (நி)

# துருக்கி-சிரியா நிலநடுக்கத்தில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 50 ஆயிரத்தைக் கடந்தது



(அங்காரா)

இந்த மாத தொடக்கத்தில் துருக்கி மற்றும் சிரியாவில் ஏற்பட்ட நிலநடுக்கத்தில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 50 ஆயிரத்தைக் கடந்துள்ளதாக இரு நாடுகளின் சமீபத்திய புள்ளி விபரங்கள் தெரிவிக்கின்றன.

துருக்கியில் நிலநடுக்கத்தால் பாதிக்கப்பட்ட 11 மாகாணங்களில் தன்னார்வலர்கள் உட்பட கிட்டத்தட்ட 240, 000 மீட்புப் பணியாளர்கள் தொடர்ந்து பணியாற்றி வருகின்றனர்.

நிலநடுக்கங்களால் பாதிக்கப்பட்ட சில பகுதிகளை அணுகுவது ஆரம்பத்தில் கடினமாக இருந்தது. ஆனாலும் மீட்பு முயற்சிகள் தொடர்கின்றன. மேலும் மீட்புப் பணிகள் தொடரும் போது, உயிரிழப்பு எண்ணிக்கை அதிகரித்து வருகிறது. சமீப நாட்களாக உயிர் பிழைத்தவர்கள் மீட்கப்பட்டதாக தகவல் இல்லை.

துருக்கியில் சுமார் 20 மில்லியன் மக்கள் நிலநடுக்கத்தால் பாதிக்கப்பட்டுள்ளனர். ஐக்கிய நாடுகள் சபையின் மதிப்பீட்டின்படி சிரியாவில் 8.8 மில்லியன் மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். (நி)

# தமிழக முன்னாள் முதலமைச்சரின் தாயார் காலமானார்



(சென்னை)

தமிழக முன்னாள் முதலமைச்சர் ஓ.பன்னீர் செல்வத்தின் தாயார் பழனியம்மாள் காலமானார்.

இவர் தனது 96 ஆவது வயதில் காலமானதாக வெளிநாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

உடல்நலம் பாதிக்கப்பட்டிருந்த அவர் அண்மையில் தனியார் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருந்தார்.

அங்கு அவருக்கு தொடர்ந்து சிகிச்சைகள் அளிக்கப்பட்டு வந்தன.

இந்நிலையில் நேற்று இரவு பழனியம்மாளின் உயிர் பிரிந்தது. (நி)

# ரஷ்யாவிற்கு எதிரான பத்தாவது தடைகளுக்கு ஐரோப்பிய ஒன்றியம் ஒப்புதல்

(பிரஸ்ஸல்ஸ்)

ரஷ்யாவின் உக்ரைன் மீதான முழு அளவிலான படையெடுப்பின் ஓராண்டு நிறைவையொட்டி ரஷ்யாவிற்கு எதிரான பத்தாவது பொருளாதார தடைகளுக்கு ஐரோப்பிய ஒன்றியம் ஒப்புதல் அளித்துள்ளது.

சமீபத்திய சுற்றுத் தடைகள் ரஷ்யா மீதான கூடுதல் வர்த்தகக் கட்டுப்பாடுகளை வழங்குகிறது. இதனை சுவீடன் ஐரோப்பிய சபையின் தலைமையகம் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை மாலை பிரஸ்ஸல்ஸில் அறிவித்தது.

மேலும், இந்த தடைகள், போருக்கு நிதியளிப்பதை மிகவும் கடினமாக்கும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது.

இந்தத் தொகுப்பில் இரட்டை பயன்பாட்டு பொருட்கள் தொடர்பான கடுமையான ஏற்றுமதி கட்டுப்பாடுகள் மற்றும் ரஷ்யாவின் போரை ஆதரிக்கும் நிறுவனங்களுக்கு எதிரான நடவடிக்கைகள், படையெடுப்பிற்கு ஆதரவாக பிரசாரம் செய்தல் மற்றும் உக்ரைனை தாக்க ரஷ்யா பயன்படுத்தும் ஆளில்லா விமானங்களை வழங்குதல் ஆகியவை அடங்கும். (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இராஜதந்திரம் என்பது கையில் கல் கிடைக்கும் வரை நாயுடன் பேச்சுக் கொடுப்பது போன்றது.

~ யாரோ

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## இராமரின் பாதணிகளை தலையில் சுமந்து வந்த பரதன்

தசரத மன்னனிடம் கைகேயி கேட்ட இரு வரங்கள் பற்றி அறியாதவர்கள் யாரும் இருக்க முடியாது.

கம்பராமாயணத்தை அறியாதவர்கள் கூட, கைகேயியையும் அவர் கேட்ட இரு வரங்களையும் அறிந்து வைத்துள்ளனர்.

அந்தளவுக்கு கைகேயி கேட்ட இரு வரங்கள் மனித மனங்களை வதைக்க வல்லவை.

ஆம், இராமபிரானுக்குப் பட்டாபிஷேகம் நடைபெற இருக்கிறது.

அச்செய்தியை கைகேயியிடம் தெரிவிப்பதற்காக தசரத மன்னன் கைகேயியின் இடம் நோக்கி வருகின்றான்.

அந்தோ! என்னே கொடுமை. கைகேயி தன் கோலத்தை மாற்றியிருந்தாள்.

பெரும் இழப்பைச் சந்தித்தவள் போல் காட்சி கொடுத்தாள்.

அதிர்ந்துபோன தசரதன்; தேவி யாது நடந்தது என வினவ,

மன்னா! முன்னம் இருவரம் தருவதாக உறுதி தந்தீர்.

அவ்விரண்டு வரங்களையும் இக்கணம் தருக என்றாள்.

தசரதனும் அதற்கு இசைய, என் மகன் பரதன் நாடாள வேண்டும். இராமன் காடேக வேண்டும் என்பதே யாம் கேட்கும் இரு வரம் என்றாள்.

கைகேயி கேட்ட இரு வரங்களால் திணுக்குற்ற தசரதன், கைகேயியிடம் மண்டியிட்டுக் கெஞ்சினானாயினும் இரங்க மறுத்த கைகேயியால், இரு வரம் கொடுத்த தசரதன் தாங்கொணாத் துயரால் மாண்டு போனான்.

இங்குதான் ஒரு விடயத்தை நாம் கவனித்தாக வேண்டும்.

அதாவது தன் மகன் பரதன் நாடாள வேண்டும் என வரம் கேட்ட கைகேயியால் பரதனின் மனதை மாற்ற முடியாமல் போயிற்று.

ஆம், தன் அண்ணன் இராமன் காடேகத் தன் தாயே காரணமாக இருந்தாள் என்றுணர்ந்த பரதன், இராமபிரானைச் சந்தித்து அவரின் பாதணிகளைப் பெற்று தன் தலை மீது வைத்து அதனைச் சுமந்து வந்தான்.

இவ்வாறு பரதன் செய்ததன் மூலம் அவன் இவ்வுலகுக்கு உணர்த்திய தத்துவம் மகத்தானது.

ஆம், யாருக்கு உரிமை கிடைக்க வேண்டுமோ அதனைத் தடுப்பது அறம் மீறிய செயலாம்.

என் அன்னை, இராமபிரானின் தலையில் இருக்க வேண்டிய இராஜகிரீடத்தை என் தலையில் சூட்ட நினைத்தாள்.

அவ்வாறு நினைத்தால் முடி அல்ல. முடி சூட்டப்படவேண்டியவனின் திருவடிதான் என் தலையில் இருக்கும் என்பதை உலகுக்கு எடுத்துரைக்கவே இராமபிரானின் பாதுகைகளை பரதன் தன் தலைமீது வைத்தான்.

ஆக, கிடைக்க வேண்டியது கிடைத்தே ஆகும். அதைத் தடுக்க யார் நினைத்தாலும் அவர்கள் ஆட்சி இழந்து அதிகாரம் இழந்து பரிதவிப்பர்.

இவ்வாறு பரிதவிப்பவர்கள் 13ஆவது திருத்தச்சட்டமூலம் பற்றிக் கதைத்தாலும் அதுபற்றி எவருமே பொருட்படுத்தார்.

இதற்குக் கைகேயியின் பின்னைய காலம் நல்ல சான்றாகும்.

# இன, மத வேறுபாடுகளே நாட்டின் வங்குரோத்து நிலைக்கு காரணம்

## எதிர்க் கட்சித் தலைவர் சஜித்

(முல்லைத்தீவு)

இன, மத வேறுபாடுகளை உருவாக்கியதன் விளைவுகளே நாட்டின் வங்குரோத்து நிலைக்கு காரணம் என எதிர்க் கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

முல்லைத்தீவில் நேற்று முன்தினம் இடம்பெற்ற கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஒரு நாடு என்ற ரீதியில் பழைய முறையில் சிந்தித்து சிந்தித்து நாம் எமது மதங்கள், எமது இனங்கள் பற்றி பேசி இன, மத பேதங்களை உருவாக்கி, தாம் தேசப்பற்றாளர்கள் என்ற மனநிலையை கட்டமைத்து அதே சேற்றில் சிக்கிக் கொண்டுள்ளதாக எதிர்க் கட்சித் தலைவர் தெரிவித்தார்.

சில காலத்திற்கு முன்பு பழங்குடி மோதல்கள் இருந்த ருவண்டா இப்போது ஆபிரிக்காவின் சிங்கப்பூர் என்று அழைக்கப்படுவதாகவும், அந்நாட்டு பாராளுமன்றத்தில் 53 சதவீதம் பேர் படித்த பெண்களாக இருப்பதாகவும், இவ்வாறானதொரு மோதலும் யுத்தமும் இருந்த எமது நாட்டில் யுத்தம் முடிவடைந்தாலும் நல்லிணக்கம் என்பது கெட்ட வார்த்தையாக மாறியுள்ளதாகவும், இன, மத வேறுபாடுகளை உருவாக்கியதன் விளைவாகவே எமது நாடு வங்குரோத்து நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளதாகவும் எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

இந்த வங்குரோத்து நிலைக்கு சிங்கள, தமிழ், முஸ்லிம், பேர்கர் என்ற பாகுபாடு இல்லை என்பதால் அனைத்து இன, மதத்தினரும் இணைந்து இந்த வங்குரோத்து நிலையிலிருந்து விடுபட்டு ஒரு நாடாக முன்னோக்கிச் செல்ல ஒன்றிணைய வேண்டுமெனவும் எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

ஐக்கிய மக்கள் சக்தி ஆட்சியில் இன, மத பேதங்களைத் தூண்டி நாட்டை அழிக்கும் நபர்கள் சட்டத்தின் முன் நிறுத்தப்பட்டு தண்டிக்கப்படுவார்கள் என தெரிவித்த எதிர்க்கட்சித் தலைவர், சாதி, மத பேதங்களை ஒதுக்கிவிட்டு, நாட்டை கட்டியெழுப்ப ஒன்றாக ஒன்றிணையுமாறும் அழைப்பு விடுத்தார். (ம-7)

# வங்குரோத்து நிலையில் நாடு; சர்வதேச செய்திகளில் இலங்கை

உள்ளூராட்சி சபைத் தேர்தல் பிற்போடப்பட்டதைத் தொடர்ந்து இலங்கை சர்வதேச செய்திகளில் இடம்பிடித்துள்ளது.

பல சர்வதேச ஊடகங்கள் இலங்கையை வங்குரோத்து நாடாக அடையாளப்படுத்தி, நிதிப்பற்றாக்குறையால் தேர்தல் பிற்போடப்பட்டுள்ளதாக செய்திகள் வெளியாகியுள்ளன.

மார்ச் 09 ஆம் திகதி திட்டமிட்டபடி உள்ளூராட்சி மன்றத் தேர்தலை நடத்த முடியாது என இலங்கை தேசிய தேர்தல்கள் ஆணைக்குழு நேற்று முன்தினம் உத்தியோக பூர்வமாக அறிவித்ததை அடுத்து இந்த அறிக்கைகள் வெளியாகியுள்ளன.

தேர்தலுக்கான புதிய திகதி மார்ச் 03 ஆம் திகதி அறிவிக்கப்படும் என தேர்தல்கள் ஆணைக்குழு மேலும் தெரிவித்துள்ளது.

உள்ளூராட்சி மன்றத் தேர்தலை நடத்துவதற்கு திறைசேரியை வற்புறுத்துவதில் தலையிடுமாறு இலங்கை பாராளுமன்ற சபாநாயகரிடம் எழுத்து மூலக்கோரிக்கையை சமர்ப்பிக்கவும் ஆணைக்குழு தீர்மானித்துள்ளது. (ம-7)

## யாழ். பல்கலைக்கழகத்தில் 4 மாணவர்களுக்கு வகுப்பு தடை விதிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கலைப்பீட மாணவர்கள் நால்வருக்கு வகுப்புத் தடை உட்பட பல்கலைக்கழகத்தினுள் நுழைவதற்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

கடந்த 22ஆம், 23 ஆம் திகதிகளில் இடம்பெற்ற கலைவார நிகழ்வுகளின் போது, மூன்றாம் வருட மாணவர்களால், இரண்டாம் வருட மாணவர்கள் தாக்கப்பட்டமை தொடர்பில் சுதந்திரமான - முறை சார்ந்த விசாரணையை மேற்கொள்வதற்கு ஏதுவாக நான்கு பேருக்கும் உள்நுழைவுத் தடை விதிக்கப்பட்டுள்ளதாக சம்பந்தப்பட்ட மாணவர்களுக்கு கலைப் பீடாதிபதி பேராசிரியர் சி. ரகுராம் அறிவித்துள்ளார். (ம-7)

## மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை திங்கட் கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 5 மணிவரை **கிளிநொச்சி பிரதேசத்தில்** பாலாவி, பொன்னாவெளி ஆகிய இடங்கள் மின்சாரம் தடைப்படும்.

## மூளாய் - காரைநகர் வீதியோரத்தில் கிடங்கு இதுவரை மூவர் படுகாயம்

மூளாய் - காரைநகர் வீதியில் மூளாய் பிள்ளையார் கோவிலுக்கு அண்மையாக, மதகு அமைக்கும் பொருட்டு வெட்டப்பட்ட கிடங்கில் விழுந்ததால் படுகாயம் அடைந்த ஒருவர் தெல்லிப்பழை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

நேற்று இரவு 7.30 மணியளவில் இடம்பெற்ற இச் சம்பவத்தில், காரைநகர் கோட்டக் கல்விப் பணிப்பாளர் ம.மகேந்திரன் என்பவரே படுகாயமடைந்துள்ளார்.

மாணவர்களுக்கு வந்த இலவச சீருடைகளைப் பொறுப்பெடுத்து காரைநகரில் வைத்து விட்டு, வீடு திரும்பும் போதே இச் சம்பவம் நடந்துள்ளது.

இதேவேளை குறித்த கிடங்கில் விழுந்து ஏலவே இரண்டு பேர் படுகாயம் அடைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-7)

## வடமராட்சியில் பிரபல உதைபந்தாட்ட வீரர்

### புற்றுநோயால் மரணம்

(கரணவாய்)

வடமராட்சியின் பிரபல உதைபந்தாட்ட வீரர் புற்றுநோய் காரணமாக உயிரிழந்துள்ளார்.

அல்வாய் மனோகரா அணியில் நீண்டகாலமாக சிறந்த தற்காப்பு வீரராக வலம்வந்த பாலதரன் என்பவரே புற்றுநோய் காரணமாக உயிரிழந்துள்ளார்

புற்று நோய் காரணமாக தெல்லிப்பழை புற்றுநோய் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் சிகிச்சை பலனின்றி பரிதாபமாக உயிரிழந்தார்

இரண்டு பிள்ளைகளின் தந்தையான சிவபாக்கியம் பாலதரன் (வயது-44) இளம் வயதில் உயிரிழந்தமை அப்பகுதியில் பெரும் துயரத்தை ஏற்படுத்தியுள்ளது. (ம-7,60)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீர் வழங்கல் திட்டத்திற்காக மரங்கள் அழிக்கப்படுவதை எதிர்த்த சோரன்பற்று கிராம மக்கள்

(தருமபுரம்)

யாழ்.மாவட்டத்திற்கு நீர் வழங்குவதை நாம் ஒரு போதும் தடுக்க மாட்டோம். ஆனால் நீர்க் குழாய்கள் அமைப்பதற்காக மரங்களை அழிப்பதை எதிர்க்கிறோம் என சோரன்பற்று கிராம மக்கள் தெரிவித்தனர்.

கிளிநொச்ச்சி பச்சிலைப்பள்ளி பிரதேச செயலகத்திற்குட்பட்ட புதுக்காட்டுசந்தி தொடக்கம் தாளையடி வரையான பிரதான வீதியின் வலதுபக்கம் நீர்வழங்கலைப் பொருத்தும் செயற்பாடுகளுக்கு இடையூறாக இருக்கின்ற மரங்கள் அழிக்கப்பட்ட வருவது மக்களின் எதிர்ப்பை அடுத்து மக்களுடனான கலந்துரையாடல் ஒன்று இடம்பெற்றிருந்தது.

குறித்த திட்டத்திற்கான மர அழிப்புக்கு மக்கள் எதிர்ப்பு தெரிவித்ததையடுத்து அண்மையில் சோறன்பற்று கிராம மக்களுக்கான விழிப்புணர்வு கலந்துரையாடல் இடம்பெற்றிருந்தது.

குறித்த கலந்துரையாடலில் பச்சிலைப்பள்ளி பிரதேச செயலாளர், மின்சார சபை , நீர் வழங்கல் அதிகார சபை மற்றும் பொதுமக்கள் என பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

கிளிநொச்சி மாவட்டத்தின் பச்சிலைப்பள்ளி பிரதேச செயலகத்திற்குட்பட்ட புதுக்காட்டுச்சந்தி தொடக்கம் தாளையடி வரையிலான பிரதான வீதியின் வலது பக்கம் நீர்வழங்கல் குழாய் பொருந்தும் செயற்பாடுகள் நடைபெற்று வருகின்றன.

இச்செயற்பாட்டிற்கு இடையூறாக உள்ள மரங்கள் அழிக்கப்பட்டு வருகின்றன.

அத்துடன் யாழ்.மாவட்டத்திற்கு நீர்வழங்கல் திட்டத்தினை தாம் ஒரு போதும் தடுக்கவில்லை இத் திட்டத்திற்கான பூரண ஆதரவை வழங்குகின்றோம். ஆனால் இத்திட்டத்திற்காக மரங்களினை அழிப்பதனால் எமது பிரதேசம் வனாந்தரமாக மாறும்

இக்கலந்துரையாடலின் இறுதியில் பிரதேச செயலாளரினால் பல உறுதிமொழிகள் வழங்கப்பட்டன அழிக்கப்படும் மரங்களுக்கு பதிலாக குறிப்பிடப்பட்ட சில இடங்களில் சிறியளவிலான நிழல் தரும் மரங்கள் வைப்பதாகவும் புதுக்காடு தொடக்கம் தாளையடி வரையிலான பிரதான வீதியின் இடை யிடையே பேருந்துத் தரிப்பிடம் அமைப்பதற்கான நடவடிக்கை மேற்கொள்வதாகவும் தெரிவிக்கப்பட்டன. (நி-316)

# கடல் உணவுகள் தென்னிலங்கைக்கு பாதிக்கப்படும் முல்லைத்தீவு நகர மக்கள்

(அக்கராயன்)

முல்லைத்தீவு நகர சந்தைக்கு கடலில் பிடிக்கப்படும் கடல் உணவுகள் முழுமையாக வருவதில்லை என பொது அமைப்புகளினால் குற்றம் சாட்டப்படுகின்றது.

முல்லைத்தீவு மாவட்டச் செயலகத்தில் நடைபெற்ற கூட்டமொன்றில் முல்லைத்தீவின் கடல் உணவு கிராமங்களுக்கு கொண்டு செல்லப்படுவதில்லை என்ற குற்றச்சாட்டுகள் தெரிவிக்கப்பட்டதன் தொடர்ச்சியாக முல்லைத்தீவு நகரத்திற்கே கடல் உணவுகள் முழுமையாக விற்பனைக்கு கொண்டு வரப்படாததன் காரணமாக மக்கள் பாதிக்கப்படுவதாக தெரிவிக்கப்படுகின்றது.

முல்லைத்தீவு நகரச் சந்தையில் மீன் விற்பனையாளர்கள் ஐந்துக்கு உட்பட்டவர்களே காணப்படுகின்றனர். இதற்கான முக்கிய காரணம் கடற்கரையில் காத்திருக்கும் மீன் கொள்வனவ்ாளர்கள் மீனினை முழுமையாக கொள்வனவு செய்து தென்னிலங்கைக்கு கொண்டு செல்கின்றனர்.

இது தொடர்பாக கரைதுறைபற்று பிரதேச சபையின் தவிசாளர் க.விஜிந்தனிடம் கேட்ட போது நீண்டகாலமாக இப்பிரச்சினை உள்ளது. கடல் உணவு கடற்கரையில் முழுமையாக விற்பனை செய்யப்படுவதன் காரணமாக முல்லைத்தீவு நகரச் சந்தைக்கு மீன்கள் கொண்டு வருவதில் குறைபாடுகள் காணப்படுகின்றன.

புதிய பொறிமுறையில் கடற்கரையில் இருந்து சந்தைக்கு கூடுதலான மீன்கள் கொண்டு வருவதற்கான வழிகளை ஏற்படுத்த வேண்டும். கடற்கரையில் வரிகள் செலுத்தாமல் வாக ணங்களில் பிற இடங்களுக்கு மீன்களை கொண்டு செல்லும் வாகனங்களை பரிசோதனை செய்வதற்கு முல்லைத்தீவு மாதிரிக் கிராமம் சந்தியிலும் வட்டுவாகல் பாலப் பகுதியிலும் சோதனை முயற்சிகள் முன்னெடுக்கப்பட வேண்டும். இவற்றை நடை முறைப்படுத்தப்பட வேண் டும். அப்போது தான் முல்லைத்தீவு நகரச் சந்தைக்கு கூடுதலான மீன்கள் கொண்டு வருவதன் மூலம் கிராமங்களுக்கும் மீன்கள் சென்றடையக் கூடிய நிலைமை உருவாகும் எனவும் பிரதேச சபை தவிசாளர் தெரிவித்தார். (நி-350)



முல்லைத்தீவு மாவட்டத்தில் குடும்ப புனர்வாழ்வு நிலையத்தினால் வாழ்வாதார உதவியைப் பெற்றுக் கொண்ட பயனாளர்களை ஊக்கப்படுத்தும் நிகழ்வு அண்மையில் முல்லைத்தீவு மாவட்ட செயலக முல்லைமணி பயிற்சி மண்டபத்தில் நடைபெற்றது.இந்த நிகழ்வில் மாவட்ட அரசாங்க அதிபர் க.விமலநாதன் பிரதம அதிதியாக கலந்து கொண்டதுடன் 2019 மற்றும் 2020 ஆம் ஆண்டு குடும்ப புனர்வாழ்வு நிலையத்தினால் வழங்கப்பட்ட வாழ்வாதாரத் திட்டத்தில் சிறப்பாக இன்றுவரையும் செயற்பட்டுக் கொண்டிருக்கும் தெரிவு செய்யப்பட்ட பயனாளர்களுக்கு 10,000.00 (பத்தாயிரம்) ரூபாய் காசோலையினை வழங்கி வைத்தார். (படம்- யதுபாஸ்கரன்)

# வன்முறைச் சம்பவங்களை கட்டுப்படுத்த தவறிய சவேந்திர சில்வா

## விசாரணை நடத்துமாறு பரிந்துரை

(கொழும்பு)

கடந்த ஆண்டு மே மாதம் 9 மற்றும் 10 ஆம் திகதிகளில் இடம்பெற்ற சம்பவங்களை கட்டுப்படுத்த இராணுவத் தளபதியாக இருந்த சவேந்திர சில்வா தவறிவிட்டார் என முன்னாள் கடற்படைத் தளபதி அட்மிரல் வசந்த கரனகொட தலைமையிலான மூவரடங்கிய குழு பரிந்துரை செய்துள்ளது.

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ நியமித்த வசந்த கரனகொட, தயா ரத்நாயக்க மற்றும் ரொஷான் குணதிலக்க ஆகியோர் அடங்கிய குழுவின் அறிக்கையின் பரிந்துரைகள் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை மேன் முறையீட்டு நீதிமன்றில் சமர்ப்பிக்கப்பட்டது.

அதன்படி கடந்த மே மாதம் 9 மற்றும் 10 ஆம் திகதிகளில் நாடு முழுவதும் இடம்பெற்ற வன்முறைச் சம்பவங்கள் தொடர்பாக பலரிடம் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டுள்ளதோடு, ஏராளமான ஆவணங்களை ஆய்வு செய்த பின்னரே இறுதிப் பரிந்துரைகள் வழங்கப்பட்டுள்ளன.

அத்தோடு இந்தச் சம்பவம் தொடர்பாக, முன்னாள் இராணுவத் தளபதி ஜெனரல் சவேந்திர சில்வா தொடர்பில் விசாரணை நடத்துமாறும் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்திற்கு இந்தக் குழு பரிந்துரை செய்துள்ளது. (நி)



# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி ரூபா | மருதனார்மடம் ரூபா | கிளிநொச்சி ரூபா |
|---|---|---|---|
| கத்தரிக்காய் | 300 | 300 | 350 |
| உருளைக்கிழங்கு | 200 | 150 | 160 |
| பச்சைமிளகாய் | 300 | 300 | 400 |
| தக்காளி | 160 | 140 | 200 |
| மரவள்ளிக்கிழங்கு | 200 | 160 | 200 |
| கோவா | 100 | 70 | 100 |
| கரட் | 140 | 200 | 240 |
| பூசணி | 80 | 80 | 80 |
| புடோல் | 200 | 200 | 200 |
| வாழைக்காய் | 180 | 180 | 200 |
| சின்ன வெங்காயம் | 300 | 250 | 320 |
| பெரிய வெங்காயம் | 160 | 140 | 150 |
| பாகற்காய் | 500 | 450 | 600 |
| வெண்டக்காய் | 350 | 300 | 400 |
| கருணைக் கிழங்கு | 100 | 100 | 120 |
| பயற்றங்காய் | 450 | 400 | 400 |
| லீக்ஸ் | 320 | 240 | 300 |
| பீற்றூட் | 200 | 200 | 250 |
| கறிமிளகாய் | 600 | 500 | 500 |
| முருங்கைக்காய் | 1500 | 1600 | 2000 |
| போஞ்சி | 320 | 250 | 400 |
| கத்தரிதம்புள்ள | 280 | 250 | 300 |
| கீரை - 1 பிடி | 120 | 100 | 120 |
| தேசிக்காய் | 200 | 200 | 200 |
| தேங்காய் (ஒன்று) | 90 | 100 | 80-120 |
| இராசவள்ளி | 400 | 250 | 350 |
| வெங்காயப்பூ | 160 | 120 | 240 |
| முள்ளங்கி | 80 | 80 | 120 |
| பொன்னாங்காணி | 100 | 120 | 60 |
| வல்லாரை | 50 | 140 | 50 |
| ஈரப்பலா | 100 | 100 | 100 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கிளிநொச்சியில்...

மாவட்ட பொது வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளதுடன் சம்பவம் தொடர்பில் கிளிநொச்சி பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (ம-7,315)

## குளத்தில்...

குறித்த நபர் துவிச்சக்கரவண்டியில் சென்றுகொண்டிருந்தவேளை துவிச்சக்கரவண்டியுடன் குளத்தினுள் விழுந்து உயிரிழந்துள்ளார்.

இதில் ஊர்காவற்றுறை - மெலிஞ்சிமுனை பகுதியைச் சேர்ந்த 51 வயதுடைய ஆண் ஒருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

இச்சம்பவம் தொடர்பில் ஊர்காவற்றுறை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம-7,33,104)

## போதைப்பொருள்...

வர் பொலிஸாரிடம் வாக்குமூலம் வழங்கியுள்ளனர்.

யாழ்.கட்டப்பிராய் பகுதியில் கடந்த 17ம் திகதி ஓய்வுபெற்ற ஆசிரியர் ஒருவரின் வீட்டுக்குள் நுழைந்து 16 பவுண் நகை கொள்ளையடிக்கப்பட்ட சம்பவம் தொடர்பில் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

வீட்டின் உரிமையாளர்கள் இரண்டு நாட்கள் வீட்டில் இல்லாத சமயம் வீட்டுக் கதவை உடைத்து வீட்டில் இருந்த 16 பவுண் நகை களவாடப்பட்டுள்ளது. இது தொடர்பில் உரிமையாளரால் கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டது.

சம்பவம் தொடர்பான விசாரணைகளை மேற்கொண்டிருந்த யாழ். மாவட்ட குற்றத்தடுப்பு பிரிவின் உப பொலிஸ் பரிசோதகர் பிரதீப் தலைமையிலான பொலிஸ் அணியினர் இரு சந்தேகநபர்களை கைது செய்துள்ளனர்.

கைதான சந்தேகநபர்களிடமிருந்து நகைகளும் மீட்கப்பட்டுள்ளது. சந்தேகநபர்கள் நீண்டநாட்களாக போதைப்பொருளுக்கு அடிமையானவர்கள் என்றும் போதைப்பொருள் பாவனைக்காகவே களவில் ஈடுபட்டதாகவும் கூறியுள்ளனர்.

மேலும் சந்தேகநபர்கள் நாயன்மார் கட்டைச் சேர்ந்த 24 வயதுடையவர்கள் என பொலிஸார் கூறியுள்ளனர். (ம-7,33,104)

## தீயில் எரிந்த...

விபத்து ஏதும் ஏற்பட்டதா? என்கிற கோணத்தில் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர். (ம-7,33,104)

## யாழிலும்...

மலைத்தொடர் அருகே எதிர்காலத்தில் ரிக்டர் அளவுகோலில் 8 ரிக்டர் அளவில் நிலநடுக்கம் ஏற்படக்கூடும் என ஹைதராபாத் தேசிய புவியியல் ஆராய்ச்சி நிறுவனம் எச்சரித்துள்ளது

எனினும், நிலநடுக்கம் ஏற்படும் திகதி மற்றும் நேரத்தை முன்கூட்டியே கணிக்க முடியாது என புவியியலாளர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

இது தொடர்பில் கருத்து தெரிவித்த புவியியல் சிரேஷ்ட பேராசிரியர் அதுல சேனாரத்ன, ரிக்டர் அளவுகோலில் 8 ஆக பலமான நிலநடுக்கம் ஏற்பட்டால் யாழ்ப்பாணம் மற்றும் கொழும்பிலும் உணர முடியும் எனச் சுட்டிக்காட்டியுள்ளார். (ம-7)

## ஐ.நா மனித...

திகதியும் இலங்கை தொடர்பிலான கலந்துரையாடல்கள் இடம்பெறவுள்ளன.

இம்முறை ஐ.நா மனித உரிமை பேரவையின் கூட்டத்தொடரில் தான் கலந்து கொள்ளவில்லை எனவும் இலங்கை சார்பில் அதிகாரிகள் குழுவொன்று ஜெனிவா செல்லவுள்ளதாகவும் வெளிவிவகார அமைச்சர், ஜனாதிபதி சட்டத்தரணி அலி சப்ரி தெரிவித்தார்.

சட்டமா அதிபர் திணைக்களம், வெளிவிவகார அமைச்சு, ஜனாதிபதி செயலகம் மற்றும் பொதுமக்கள் பாதுகாப்புத் திணைக்களம் ஆகியவற்றின் அதிகாரிகள் குழுவொன்று இலங்கை சார்பில் கலந்துகொள்ளவுள்ளதாக அவர் கூறினார்.

இலங்கை தொடர்பிலான பிரேரணைகள் இம்முறை கொண்டுவரப்படமாட்டாது எனவும் வெளிவிவகார அமைச்சர் தெரிவித்தார். (ம-7)

# இலங்கையில் 7 மொழிகளில் சுற்றுலா மொபைல் செயலி

(கொழும்பு)

வெளிநாட்டு சுற்றுலா பயணிகளின் பாதுகாப்பிற்காக 7 மொழிகள் கொண்ட புதிய சுற்றுலா மொபைல் செயலியை அறிமுகப்படுத்தவுள்ளதாக சுற்றுலாத் துறை அமைச்சர் ஹரின் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

நிகழ்வொன்றில் உரையாற்றிய அமைச்சர் பெர்னாண்டோ, அனைத்து முச்சக்கரவண்டிகளையும் மொபைல் செயலி பதிவு செய்யும் என்றும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் ஸ்கேன் செய்ய வாகனத்தில் பார் குறியீடு காட்டப்படும் என்றும் தெரிவித்துள்ளார்.

பொலிஸார் செயலியை கண்காணித்து, ஏதேனும் அசம்பாவிதம் நடந்தால் நடவடிக்கை எடுப்பார்கள்,

குறிப்பிட்ட சில சுற்றுலாப் பகுதிகளில் முச்சக்கரவண்டி சாரதிகளால் துன்புறுத்தப்படும் சம்பவங்கள் தொடர்ச்சியாக இடம்பெற்று வருவதால் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

உள்ளூர் சுற்றுலாத் துறையின் பல பங்குதாரர்களின் ஈடுபாட்டுடன், இலங்கையிலுள்ள சுற்றுலா இடங்கள் மற்றும் நாட்டிலுள்ள சுற்றுலா ஹோட்டல்கள் பற்றிய விபரங்களையும் மொபைல் செயலி கொண்டிருக்கும்.

வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளின் வசதிக்காக மொபைல் செயலியில் பணம் செலுத்தும் முறையும் சேர்க்கப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்தார். (ம-7)

## அரசுக்கு எதிராக...

இதற்கமைய, ஐக்கிய மக்கள் சக்தியினால் தலவாக்கலையில் நேற்று ஆர்ப்பாட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

இதில் அந்த கட்சியின் செயற்பாட்டாளர்கள், பொதுமக்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

இதேவேளை, உள்ளூராட்சி மன்றத் தேர்தலை திட்டமிட்டப்படி மார்ச் 9 ஆம் திகதி நடத்துமாறு கோரி, மஸ்கெலியா நகரில் நேற்று போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

புதிய லங்கா சுதந்திரக் கட்சியினரால் இந்த ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.

மஸ்கெலியா நகரில் உள்ள எரிபொருள் நிரப்பு நிலையத்துக்கு முன்பாக இடம்பெற்ற இந்த ஆர்ப்பாட்டத்தில் பலர் கலந்து கொண்டனர்.

அதேநேரம், தேர்தலை உரிய வகையில் நடத்துமாறும் அத்தியாவசிய பொருட்களின் விலை அதிகரிப்புக்கு எதிர்ப்பு தெரிவித்தும் யாழ்ப்பாணத்தில் ஆர்ப்பாட்டம் ஒன்று மேற்கொள்ளப்பட்டது. (ம-7)

## 6 இலட்...

சபை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

குறைந்த வருமானம் கொண்ட குடும்பங்கள் மிகவும் ஆபத்தில் இருப்பதாக அந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

பொருளாதார நெருக்கடியின் ஆரம்பத்திலிருந்து மின்சாரம் மற்றும் நீர்க் கட்டணம் செலுத்துவது 40 வீதத்தால் குறைந்துள்ளதாக மின்சாரம் மற்றும் நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபைகளின் அதிகாரிகள் சுட்டிக்காட்டுகின்றனர். (ம-7)

ஜாதிக சம்பத
சீட்டிழுப்பு திகதி 25/02/2023
சீட்டிழுப்பு இலக்கம் 1497
வெற்றி இலக்கங்கள்
மீனம் 4 9 1 8 3 2
தேசிய லொத்தர் சபை

தன நிதானய
திகதி - 2023.02.25
சீட்டிழுப்பு இலக்கம் - 1072
O 33 43 49 71

கொவிசெத
திகதி 2023.02.25
சீட்டிழுப்பு இலக்கம் 3284
R 23 25 26 48
தேசிய லொத்தர் சபை

மெகா பவர்
திகதி 25/02/2023
சீட்டிழுப்பு இலக்கம் 1390
R 09 02 24 51 52

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2023.02.25
சீட்டிழுப்பு இலக்கம் 351
மகரம் 43 44 48 62 மகரம்
தேசிய லொத்தர் சபை

மஹஜன சம்பத
திகதி 2023/02/25
சீட்டிழுப்பு இலக்கம் 5042
Z 1 3 8 6 0 6
தேசிய லொத்தர் சபை

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 2017
நிறம் கரும் நீலம்
சீட்டிழுப்பு திகதி 2023.02.25
தினம் சனிக்கிழமை
D 06 22 46 71
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 4,768,620/-
DLB

சனிதா
சனிக்கிழமை
சீட்டிழுப்பு திகதி : 2023.02.25
சீட்டிழுப்பு இல : 4178
வர்ணம் : இளம் பச்சை
ரூ. 5,350,680/-
04 29 61 62 W
DLB

ராசி
சுப்பர் ஜக்பொட் ரூ. 3,223,978/-
திகதி 2023-02-25
வெற்றி வாரம் 3729
வர்ணம் இள நீலம்
08 34 39 57
ரூ. 10,432,620/-
DLB

ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
A 10 07 59 64 77
சீட்டிழுப்பு வாரம் 1193
வர்ணம் சிவப்பு
திகதி 2023.02.25 சனிக்கிழமை
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 308,868,012.20
DLB
Web : www.dlb.lk

உத்தியோகபூர்வ முடிவுகள்
வெற்றி வாரம் 574
திகதி 2023-02-25
வர்ணம் செம்மஞ்சள்
B 12 50 66 01.
எதிர்வரும் சுப்பர் பரிசுப்பொதி ரூ. 17,464,784/-
DLB
Web: www.dlb.lk

அத கோடிபதி
சனிக்கிழமை
சீட்டிழுப்பு இல : 1843
வர்ணம் : மஞ்சள்
சீட்டிழுப்பு திகதி : 2023.02.25
ரூ. 4,316,620/-
15 31 43 72 C
DLB

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# NORTH LANKA IIT CITY CAMPUS
## APPROVED BY UGC AND UNESCO

U.G.C அங்கீகாரம், வடக்கு மாகாணக் கல்வி அமைச்சின் அங்கீகாரம், கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் அங்கீகாரம்

இலங்கை கல்வி அமைச்சின் அங்கீகாரம், IAU வின் அங்கீகாரம், UNESCO அங்கீகாரம், 9. WHED யின் அங்கீகாரம்

**பின்வரும் கற்கைநெறிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன**

**Bachelor of Education - TOPUP 1 YEAR**
தகைமை : Diploma in Training College/ College Education
காலம் : 1 Year

**Master of commerce with Computer Application**
தகைமை : Bachelor of Commerce
காலம் : 1 Year

**Bachelor of Education 3 YEAR**
தகைமை : A/L 3 Passes
காலம் : 3 Years

**Bachelor of Business Administration**
தகைமை : A/L 3 Passes
காலம் : 3 Years

**Master of Education**
தகைமை : Bachelor of Education
காலம் : 1 Year

**Master of Business Administration**
தகைமை : Any Degree
காலம் : 1 Year

**Bachelor of Commerce with Computer Application**
தகைமை : A/L 3 Passes
காலம் : 3 Years

**Post Graduate Diploma in Public Administration**
தகைமை : Any Degree
காலம் : 1 Year

Matale Lanka City Campus. Mr.C.Jeevarafnam main street, matale, T.P:071 347 6838, 070 319 9333

North Lanka IIT Top Floor, People's Bank Building, Stanley Road, Jaffna. T.P: 076 750 4535

Lanka City Campus Vavuniya Station Road, Vavuniya T.P : 076 488 6169

Lanka City Campus Mannar, Kilinochchi, Batticaloa and Trincomalee Dr.Rev.Fr.S.Jeyarajan Coonghe T.P: 070 229 1281

(C-6058)

## நீர்க்கசிவைத் தடுப்பதற்கு

உங்கள் கட்டடங்கள் மற்றும் புதிதாக கட்டப்படும் கட்டடங்களில் ஏற்படும் நீர்க்கசிவை தடுப்பதற்கு உலக தரம் வாய்ந்த இரசாயனப் பொருட்களை கொண்டு 10 வருட உத்தரவாதத்துடன் சீர் செய்து தருவோம்

போலிகளை கண்டு ஏமாறாதீர்கள் (14732)

**North & East Engineering**
55, stanly Road, Jaffna, Srilanka.
021 222 2363, 077 524 4177, 077 232 3000
www.northand east engineering.com

## இராஜ மருத்துவம்

குழந்தைகள் கிரந்தி, அவியல், சளி, இருமல், செவ்வாப்பு, கிரந்தி முட்டு கணை நோய்களுக்கும் குரோகோமா, சூதக வலி, ஆனந்த வாயுவுக்கும் சிகிச்சை பெறவும், கோரோசனை மாத்திரை கிரந்தி எண்ணெய் பெற்றுக் கொள்ளவும்.

பேராசிரியர் Dr.K.பாலசுப்பிரமணியம் சிறப்பு ஆலோசகர் (C-6057)

076 274 4488 வல்லை வீதி, சங்கானை.

## பெண் வேலையாட்கள் தேவை

யாழ். நகரில் இயங்கும் (ஆனைக்கோட்டை சந்திக்கு அருகாமையில்) அச்சகம் ஒன்றிற்கு புத்தகம் கட்டுநர் வேலைக்கு பெண் வேலையாட்கள் தேவை. அனுபவம் உள்ளவர்களும் மற்றும் பழக விரும்புபவர்களும் விரும்பத்தக்கது. 82,86,87 பஸ் பாதையில் உள்ளவர்களுக்கு முன்னுரிமை சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும். (14726)

077 392 0797

## தனா பியூட்டி பஷன்

அழகுக்கலை வகுப்புக்கள் தனியாக மற்றும் குழுவாக நடைபெறுகின்றன. ஆர்வமுள்ளவர்களுக்கு இலவச பயிற்சி வகுப்புக்கள் நடைபெறும். (14699)

தொடர்புகளுக்கு

077 601 8563
No.101, செட்டித்தெரு, நல்லூர், யாழ்ப்பாணம்.

## காணி விற்பனைக்கு

யாழ். மயிலிட்டியில் கரையோர காப்பட் வீதியிலிருந்து 100m தூரத்தில் 12 பரப்பு காணி (விமான நிலையம் துறைமுகம் என்பன 1 km தூரத்தில் உள்ளன) விற்பனைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு (C-1935)

075 521 3533

## வேலையாட்கள் தேவை

யாழ்ப்பாணத்தில் இயங்கும் எமது கட்டட ஒப்பந்த நிறுவனத்திற்கு அனுபவமுள்ள மேசன், கூலியாட்கள் மற்றும் பெயின்ரர் தேவை. (C-6055)

தொடர்புகளுக்கு

076 760 0403
077 777 0969

## சுய தொழில்வாய்ப்பு - நிறைந்த வருமானம்

V2 TRAVELS CHOLA FOODS உடன் இணைந்து

புதிதாக ஆரம்பிக்கும் உணவுப்பொதிகள் விநியோகத்தில் உங்கள் பிரதேசத்திற்கான உணவுப்பொதிகள் விநியோகத்தராக நீங்களும் இணைந்து கொள்ளுங்கள்

பகுதிநேரமாக மாதம் 50'000/= மேல் சம்பாதிக்கலாம்

(இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்)

ஆட்டோ/ மோட்டார் சைக்கிள்/சைக்கிள் வைத்திருத்தல் அவசியம்

யாழ் மாவட்டத்தில் எப்பகுதியில் உள்ளவர்களும் தொடர்பு கொள்ளலாம் (C-6061)

V2 TRAVELS 0777-068-777

## உடனடி வேலை வாய்ப்பு

இம்முறை A/L பரீட்சைக்கு தோற்றியோருக்கான ஓர் அருமையான வாய்ப்பை எமது W.E.C நிறுவனம் வழங்குவதற்கு தயாராக உள்ளது. எமது நிறுவனத்தின் புதிய கிளைகளுக் கான பதவி வெற்றிடங்கள் நிரப்பப்பட உள்ளன. ஒவ்வொரு கிளைகளுக்கும் 20 - 30 நபர்கள் தெரிவு செய்யப்படவுள்ளனர்.

- ஒவ்வொரு பதவிகளுக்கும் பயிற்சிகள் வழங்கப்படும்
- பயிற்சியின் போதும் பயிற்சியின் பின்னரும் கவர்ச்சிகரமான சம்பளத்தினை பெற்றுக் கொள்ளலாம்
- தரம் 10, O/L படித்த மாணவர்களும் (ஆண்/ பெண்) இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.
- நாடு பூராகவும் இவ் வேலை வாய்ப்பிற்காக நபர்கள் தெரிவு செய்யப்படவுள்ளனர்.

உங்கள் சுய விபரக் கோவையை 077 174 3524 எனும் இலக்கத்திற்கு whatsapp செய்யவும் தொடர்புகளுக்கு முந்துங்கள் (14736)

077 174 3524, 077 689 3656

## காணி விற்பனைக்கு

**யாழ்ப்பாணம் புத்தூரில் 90 பரப்பு காணி விற்பனைக்கு**

- பருத்தித்துறை வீதி புத்தூர் சந்தியில் இருந்து 1 1/2 km
- குடியிருப்புக்கள் சூழ உள்ள காணி
- புத்தூர் - சாவகச்சேரி செல்லும் பிரதான வீதியில் இருந்து 500 m தூரத்தில் நன்னீர் ஊற்று நிலம்
- விவசாயம் செய்யவும் வீடு கட்டவும் உகந்த காணி
- ஒரு பரப்பின் விலை ஒரு இலட்சத்து ஐம்பது ஆயிரம் ரூபாய் மட்டும்
- 2 1/2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் (14721)

076 465 0171, 076 911 9371

## உடனடி வேலை வாய்ப்பு
**நிர்வாக உத்தியோகத்தர்**



விமானப் பயணச்சீட்டுக்கள் விரைவுப் பொதிகள் சேவை விசா சேவைகள்

V2 TRAVELS

வயது :-30 வயதிற்குட்பட்ட (இருபாலாரும்) அனுபவமுள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்

சம்பளம் - 30'000/- பயிற்சியின்போது - 25'000/-

எமது கிளைகள்: கிளிநொச்சி, சாவகச்சேரி, நெல்லியடி, திருகோணமலை, சேப்பாபு, பண்டத்தரிப்பு, கொழும்பு, சுன்னாகம், மாங்குளம், பருத்தித்துறை, வல்வெட்டித்துறை, புத்தூர், சங்கானை (C-6061)

0777-068-777
v2vacancies@gmail.com

## காணி விற்பனைக்கு

**யாழ்ப்பாணம் தாவடியில் 5 பரப்பு காணி விற்பனைக்கு**

- மூன்று பரப்பாகவும் இரண்டு பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலையில்
- KKS வீதியில் இருந்து இரண்டாவது காணி
- தாவடி சந்தியில் இருந்து 100 m தூரத்தில் (14720)

076 485 4390
076 436 5814

## காணி விற்பனைக்கு

**யாழ்ப்பாணம் புத்தூரில் 54 பரப்பு காணி விற்பனைக்கு**

- பருத்தித்துறை வீதியில் இருந்து 1 km தூரத்தில்
- புத்தூர் சோமஸ்கந்தா வித்தியாலயத்திலிருந்து 1 km தூரம்
- புத்தூர் சாவகச்சேரி செல்லும் பிரதான வீதியில் காபற் வீதியில் இருந்து இரண்டாவது காணி
- அரச தனியார் பேருந்துகள் செல்லும் வீதி நன்னீர் ஊற்று நிலம்
- ஒரு பரப்பின் விலை இரண்டு இலட்சம் ரூபாய் மட்டும்.
- 2 1/2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் (14721)

076 435 0614, 077 638 5683

CHOLA FOODS CHOLA INTERNATIONAL (P) LTD
CIMS COLLEGE OF INTERNATIONAL MIGRATION SKILLS

**CHOLA FOODS & CIMS COLLEGE**

SCHOLARSHIPS முற்றிலும் இலவச Hotel Management கற்கை நெறிகள்

வேலை செய்துகொண்டே படிக்கும் வாய்ப்பு



- FOOD & BEVERAGE
- COOKERY
- HOUSE KEEPING
- FRONT OFFICE
- DIPLOMA IN HOTEL MANAGMENT

போன்ற மேலும் பல கற்கைநெறிகள் (கற்கைநெறி முடிவில் NVQ சான்றிதழ் வழங்கப்படும்)

- பயிற்சிக்காலத்தில் 25'000/= சம்பளத்துடனான வேலைவாய்ப்புக்கள்
- தங்குமிட உணவு வழங்கப்படும்
- வசதிகுறைந்த மாணவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்
- வயதெல்லை 16 தொடக்கம் 25 வரை
- இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்

பட்டுப்படுத்தப்பட்ட அனுமதிகள்
நிர்வாகத்தின் தெரிவே இறுதியானது

0777-068-777 (C-6062)

## வீட்டுடன் காணி விற்பனைக்குண்டு

நல்லூர் சுற்றாடலில் 4 பரப்பு, 5 பரப்பு அம்மன் வீதியில் 3 பரப்பு வீட்டுடன், சங்கிலியன் வீதியில் வீட்டுடன் 1 1/2 பரப்பு, மருதனார் மடத்தில் வீதியுடன் 19 பரப்பு, மல்லாகத்தில் 19 பரப்பு விற்பனைக்குண்டு. (C-6056)

தொடர்புகளுக்கு

077 603 3259

CCTV கமராக்கள் பொருத்துதல், பழுது பார்த்தல் உத்தரவாதத்துடன் செய்து தரப்படும். (14711)

**V Vision Security Solutions**

077 998 6772

## வீடு வாடகைக்கு தேவை

பலாலி வீதி, பருத்தித்துறை வீதி போன்ற பிரதான வீதிகளை அண்மித்த பகுதிகளில் நல்ல சுற்றுப்புறச் சூழலில் நான்கு (4) அல்லது மூன்று (3) அறைகள் மற்றும் இரண்டு (2) குளியலறைகள் கொண்ட வீடு வாடகைக்கு தேவை. குறைந்தது இரண்டு (2) வருடகால வாடகைக் காலமும் நியாயமான வாடகையும் எதிர்பார்க்கப்படுகின்றது. (14678)

075 571 7376

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்சோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 26.02.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.